தொகுப்பு
மலர் 15 இதழ் 8,9
31 Aug 1981

JL
ஞா211,N02G5
N31.15.8,9
210465

400

ஓம்

ஞானசாகரம்

(அறிவுக்கடல்)

JNANASAGARAM

இஃது

இருபத்தொன்பது ஆண்டுகளாக நடைபெறுந்
தனிச் செந்தமிழ் வெளியீடு

A BI-MONTHLY

பது. கரு.] பிரமோதூத ௵ கார்த்திகை, மார்கழி [இதழ், அ, கூ.

பொருளடக்கம்

தென்புலத்தார் யார்?
மக்கள் நூறு ஆண்டு உயிர்வாழ்தல் எப்படி?

8 - SEP 1931

ஆசிரியர்:
மறைமலையடிகள் என்னும்
ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள்,
SWAMI VEDACHALAM,
பொதுநிலைக்கழக குரு,
பல்லாவரம்
PALLAVARAM

பொதுநிலைக்கழக நிலையத்தின்கண் உள்ள
டி. எம். அச்சுக்கூடத்திற்
T. M. PRESS
பதிப்பிடப்பட்டது;

31st, August, 1931.

ஒருபதுமக் கையொப்பம்]   [நான்கு ரூபா

All Rights Reserved.

ஓம்

ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் என்னும்

மறைமலையடிகளால்

இயற்றப்பட்ட பிற்குறிப்பிட்ட நூல்களைக் கற்று எல்லாரும் அறிவிற் பெரியராதல் வேண்டும்.

கோகிலாம்பாள் கடிதங்கள் (2-ஆம்பதிப்பு)

AN ORIGINAL TAMIL NOVEL IN LETTER-FORM

இதுவரையில் உயர்ந்த பயனையும் இன்பத்தையுந்தரும் புதுக்கதைகள் தமிழில் இல்லாமலே இருந்தன; அக் குறைபாட்டை நீக்குதற்கே கோகிலாம்பாள் கடிதங்கள் என்னும் இப் புதுக்கதைநூல் எழுந்தது. பெண்டிரும் சிறுபிள்ளைகளுங் கற்றவர்களும் படித்து இன்புறத்தக்கது. கதைகள், நாடகங்கள், காவியங்களைப்பற்றி நுண்ணிய ஆராய்ச்சி செய்த புதிய ஒரு முகவுரையொடு கூடியது. கைக்கடக்கமான அழகியபதிப்பு, 308-பக்கங்கள் உள்ளது; கலிக்கா, விலை மூன்று ரூபா.

அறிவுரைக்கொத்து (2-ஆம்பதிப்பு)

INSTRUCTIVE ESSAYS IN PURE & SIMPLE TAMIL

முதற்பதிப்பில் இல்லாத ஐந்து நீண்ட கட்டுரைகள் இதிற் சேர்க்கப்பட்டிருக்கின்றன; மொத்தம் பதினெட்டுக் கட்டுரைகள். இவை அவ்வளவும் எளிதில் அறிந்துகொள்ளத்தக்க தனித்தமிழ் நடையில் எழுதப்பட் டிருக்கின்றன. பெண்டிர் பிள்ளைகள்முதல் ஆண்டில் முதிர்ந்தார் ஈறான எல்லாருங் கட்டாயமாகத் தெரிந்து அறிவுவிளங்கப் பெறுதற்குரிய சிறந்த கட்டுரைகள். இலக்கண இலக்கியப் பிழையில்லாத திருத்தமான அழகிய செந்தமிழ்நடையில் இவை எழுதப்பட்டிருத்தலால் இவற்றை அடுத்தடுத்துப் பயில்வோர், அரும்பெரும் பொருள்களை எளிதாக உணர்வதொடு, பிழையில்லாத இனிய தமிழ்நடையில் எழுதவும் பேசவும் வல்லராவர். 216-பக்கங்கள், கலிக்கா, இரண்டுரூபா நாலணா.

தமிழ்நாட்டவரும் மேல்நாட்டவரும

The Tamils vs The Westerners

தமிழ்நாட்டவர்க்கும் மேல்நாட்டவர்க்கும் உள்ள அறிவுமுயற்சி வேறுபாடுகளை விளக்கி, நம்மவர் முன்னேற்றத்திற்கு உண்மைவழி காட்டுவது; 32-பக்கம், விலை எட்டணா.

பொதுநிலைக் கழக அறிக்கையும் அம்பலவாணர் திருக்கூத்தின் உண்மையும் விலை ஒரு ரூபா.

THE SHORT STORIES OF H. G. WELLS

1150 pages, cheap edition; price Rs. 6 - 2 as.

All the most interesting stories (sixty in number) of this famous novelist, scientist and historian are brought together in this volume by the publishers Messrs Ernest Benn, Ltd., London. In other editions each story of which the present volume consists, is being sold for Rs. 2 - 14 as. In order to make them accessible to all, this wonderfully cheap edition is issued.

"H. G. Wells painted cameos unforgettable in their beauty and richness of imagination." by W. D. Bowman in his "The A B C of Short-Story Writing"

"The majority of Wells' Short Stories are extraordinarily clever; here there is a touch of greatness..........he remains one of the most potent literary forces to-day; a most stimulating and original ideologist." by Dr. A. Compton-Rickett in his "A History of English Literature.

8-SEP 1981

ஓம்

தென்புலத்தார் யார்?

(ஆசிரியர் மறைமலையடிகள் எழுதியது)

சென்ற தைப்பூச நாளன்று பல்லாவரத்தில் நடைபெற்ற பொதுநிலைக் கழக இருபதாம் ஆண்டு விழாப் பேரவையில் திருவாளர் கி. குப்புசாமி முதலியாரவர்கள் "தென்புலத்தார் தெய்வ" மென்னுந் திருக்குறளிற் போந்த தென்புலத்தா ரென்னுஞ் சொல்லுக்குப் பரிமேலழகியார் உரையைத் தழுவி உரைத்த கொள்கையினை யாம் உடன்படாது, அச்சொல்லுக்கு வேறுபொருள் கூறினேமாக, அதுபற்றி அறிஞர்க்குள் வழக்கு நேர்ந்ததாகலின், யாம் கொண்ட கருத்தினை நன்கு விளக்கிக் காட்டவேண்டுமென அன்பர்பலர் கேட்டுக்கொண்டதற்கிணங்கி, அதனை இங்கே இயன்றமட்டும் விளக்குவான் புகுந்தேம்.

தென்புலத்தா ரென்பதற்குப் பரிமேலழகியா ருரைத்த பொருள் இது: "தென்புலத்தார் பிதிரர்; பிதிரராவார் படைப்புக்காலத்து அயனாற் படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி; அவர்க்கு இடம் தென்றிசை யாதலின் தென்புலத்தா ரென்றார்."

இனித், தெற்கே குமரிநாடு இருந்தகாலத்து அதன்கண் ஓடிய பஃறுளி யாற்றங்கரையை யடுத்த பெருநாட்டில் அரசு செலுத்திய பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி மேலதாக வைத்து நெட்டிமையார் என்னும் நல்லிசைப்புலவர் பாடிய "ஆவுமானியற் பார்ப்பனமாக்களும்" (புறநானூறு, ௯) என்னுஞ் செய்யுளிலும்,

"தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்" என்று தென்புலம் வாழ்நர் குறிக்கப்படுகின்றனர். இச் செய்யுளுக் கெழுதப்பட்ட பழைய உரையில் தென்புலம் வாழ்நர் என்பதற்குத் "தென்றிசைக்கண் வாழ்வோராகிய நுங்குடியி லிறந்தோர்" என்பது பொருளாக எழுதப்பட்டிருக்கின்றது.

தென்புலத்தார் என்னுஞ் சொல்லுக்குப் பரிமேலழகியார் உரைத்த பொருளும், புறநானூற்று உரைகாரர் உரைத்த பொருளும் ஒன்றோடொன்று ஒவ்வாமல் மாறுபட்டுநிற்றல் மேலேகாட்டிய அவ்விருவருரைகளையும் ஒத்து நோக்குவார்க்கு நன்கு விளங்கும்.

இனி, இவ்விருவேறு உரையுள் எஃது அச்சொற்பொருள் உண்மையறிவிப்பதென்பது ஆராயற்பாற்று. இந்நிலவுலகமெங்கணு முள்ள மக்கட் கூட்டத்தாரிற், பண்டுதொட்டு நாகரிகத்திற் சிறந்தார் முதல் அதிற்

சிறவாதார் ஈருக எல்லா வகுப்பினரும் இறந்துபட்ட தத்தம் முன்னோர்களை நினைந்து வழிபாடாற்றி வந்திருக்கின்றனர். தம் முன்னோரை நினைந்து வழிபடாத ஒரு வகுப்பினரை யாண்டுங் காண்டல் இயலாது. எங்குமுள்ள மக்களின் இவ்வியற்கை வழக்கத்துக்கு இசையவே நம் பண்டைத் தமிழ்மக்களுந் தம்மை நாகரிகவாழ்க்கையில் வாழச்செய்த தம் முன்னோரை நினைந்து வழிபாடு செய்துவந்தனர்; இவர் அங்ஙனந் தம் முன்னோரை வழிபட்டு வந்த குறிப்புப் புறநானூற்றுரைகாரர் "தென்றிசைக்கண் வாழ்வோராகிய நுங்குடியில் இறந்தோர்" என்றுரைத்தவுரையால் தெற்றென விளங்காநிற்கின்றது.

மற்றுப், பரிமேலழகியார் உரைத்த உரையோ தமிழரில் இறந்துபட்ட முன்னோரைக் குறியாதாய்த், 'தென்புலத்தார்' என்பதற்குப் 'பிதுரர்' என்று பொருள்கூறி, "அப்பிதுரராவார் படைப்புக்காலத்து அயனாற் படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி" என்றும், "அவர்க்கிடந் தென்றிசை" என்றும் அவர் வரலாறு விரித்தது. எனவே, பிதுரர் என்பார் தமிழரின் இறந்துபட்ட முன்னோரல்லரென்பதூஉம், அவர் நான்முகனாற் படைப்புக்காலந்தொட்டே படைக்கப்பட்டுத் தென்றிசைக்கண் வாழும் ஒரு கடவுள் வகுப்பினராவ ரென்பதூஉம் பரிமேலழகியார் கருத்தாகின்றன. ஆனால், வடநூல்களிலோ பிதுரரைப்பற்றிய வரலாறு பரிமேலழகியார் கூறியபடி காணப்படவில்லை. அரிவம்ஸத்திலும் வாயுபுராணத்திலும் அவர் வரலாறு இங்ஙனஞ் சொல்லப்படுகின்றது: "தேவர்கள் நான்முகனை வணங்காது இகழவே, அவன் அவர்களைப் பேதையராகும்படி வைதான்; அதுகண்டு அவர் தாஞ் செய்த பிழையைப் பொறுக்கும்படி வேண்ட, அவன் அவர்களை நோக்கி 'நீவிர் நும்புதல்வர்பால் அறிவுபெறக்கடவீர்' என்று ஏவினான். அங்ஙனமே அத் தேவர்கள் தம் புதல்வர்பாற் றவச்சடங்குங் கழுவாய்ச் சடங்குங் கற்றுணர்ந்து, அங்ஙனங் கற்றுணர்ந்தமை நோக்கித் தம் புதல்வர்களையே 'பிதுரர்' என வழங்கினர்; அக் காரணம் பற்றியே தேவர்களின் புதல்வர்கள் முதற்பிதுரராயினர்." ஏனைய புராணங்களும் பிதுரர் வரலாற்றை இவ்வாறே நுவல்கின்றது. ஆனால், மனுஸ்மிருதியோ, இரணியகருப்பன் மகன் மனு; அவன் புதல்வர்களான விராஜர், மரீசி, அத்திரி, பிருகு, ஆங்கிரசர், புலத்தியர், வசிட்டர் முதலான ஏழு முனிவர்களின் மக்களே 'பிதுரர்' ஆவரென்றும், இவர்கள் எழுவகைக் கூட்டத்தினராய்ச் சாத்தியர்களுக்கும், அக்நிஷ்வாத்தர்களுக்கும், தைத்தியர் தானவர் இயக்கர் கந்தருவர் நாகர் இராக்கதர் சுபர்ணர் கின்னரர்களுக்கும், பிராமணர்களுக்கும், க்ஷத்திரியர்களுக்கும், வைசியர்களுக்கும், சூத்திரர்களுக்கும் பிதுரராவரென்றும் நுவலாநிற்கின்றது (௩, ௧௯௪–௧௯௭). இந் நூல்களிலாதல், ஆபஸ்தம்பர் கௌதமர் வசிட்டர் போதாயனர் இயற்றிய தருமசூத்திரங்களிலாதல், சாங்காயனர் ஆஸ்வலாயனர் பாரஸ்கரர் காதிரர் கோபிலர் இரணியகேசின் ஆபஸ்தம்பர் இயற்றிய கிருகிய சூத்திரங்களிலாதல் மேற்கூறிய 'பிதுரர்' தென்புலத்தில் உள்ளவராகக் குறிப்பிடப்படவில்லை.

இனி, இந்நூல்களுக்கும் வடமொழியில் உள்ள மற்றெந்நூல்களுக்கும் முற்பட்டதாகிய இருக்குவேதமானது எவரைப் பிதுரர் என்று கூறுகின்றதென்பதைச் சிறிது ஆராய்வாம். இருக்குவேதப் பத்தாம் மண்டிலத்தின்கண் உள்ள பதினைந்தாம் பதிகமானது பிதுரர்கண்மேற் பாடப்பட்டிருக்கின்றது. அதனைப் பாடிய பண்டை ஆரியர், இறந்துபோன தம் முன்னோரையே பிதுரர்களாக விளித்துப் பாடியிருக்கின்றனர்; அவர் பாடிய அப் பதிகத்தின் சில பகுதிகளை இங்கே மொழிபெயர்த்துத் தருகின்றாம்:-

"சோமபானத்தில் ஒருகூறு பெறுதற்குத் தக்காரான மூதாதைகள் கீழுள்ள நடுவுள்ள மேலுள்ள உலகங்கட்கு மேலேறுக!
ஆவிவடிவத்தைப் பெற்ற அவர்கள் அமைதியும் அறமுமுடையராய்
யாம் அழைக்குங்கால் வந்து எமக்கு உதவிசெய்க! (௧)

முன்னரே இறந்துபோனோரும், அவர்க்குப்பின்னர் இறந்துபோனோரும்,
இம் மண்ணுலகத்திற்கு அணித்தாகத் தங்கினோரும்,
வல்லரான தேவர்களிடையே தங்குவோரும் ஆகிய
மூதாதைகளுக்கு இவ்வணக்கத்தைச் செலுத்துவோமாக! (௨)

சோமநறவைப் பெறுதற்குத் தக்காரான, எங்கள் சோமவிருந்திற்குச்
சிறப்புடன் வந்தோரான எங்கள் பழைய மூதாதைகளுடன்
விழைவுடையாரொடு விழைவுடையனாய்க் களிப்புடையனாய்
இயமன் தான்வேண்டியபடி யாமிடும்அவியுணவை அயில்க! (௮)

ஓ தீக்கடவுளே, ஒளியுலகில் உறைபவராய், முதற் பிறந்தவராய்,
இறைவனை வழுத்துபவராய்
அவியுணவை அயில்பவரும் பருகுபவருமாய், மெய்ம்மையுடையராய்த்,
தேவர்களோடும் இந்திரனொடும் இயங்குபவராய் உள்ள எம்
எண்ணிறந்த பண்டை மூதாதைகளுடன் நீ வருக! (௧௦)

ஓ ஜாதவேதனே, இங்கு வந்தவரும் வாராதவரும், யாம் அறிந்தவரும்
அறியாதவரும் ஆன மூதாதைகள் இத்துணைய ரென்பதை
நீ நன்குணர்வை; அவரவர் பங்குக்கென்று நன்கு சமைத்துவைக்கப்பட்ட
இவ் வேள்வியை ஏற்றுக்கொள்க! (௧௧)

தீயில் எரிக்கப்பட்டவரும், எரிக்கப்படாமற் புதைக்கப்பட்டவரும்
ஆன அவர்கள் வானுலகின் நடுவில் தாம் பெறும் அவியுணவினாற் களிகூர்கின்றார்கள்;
ஓ முதல்வனே, அவர்கட்கு ஆவியுலகத்தையும், அவர்கட்குரிய
ஆவியுடம்பையும், நின்னுள்ளம்வேண்டியபடியே ஈந்திடுக!" (௧௪)

210465

இங்ஙனம் போந்த பழைய இவ் விருக்குவேதப் பதிகத்தில், ஆரியரின் மூதாதைகளே 'பிதரர்' ஆதலும்; அவர்கள் தாந்தாஞ் செய்த நல்வினை தீவினைக்கேற்ப இறந்தபின் இம் மண்ணுலகத்திற்கு அணிமையிலும் இதற்குமேல் நடுவணதான வானுலகிலும் அதற்குமேலுள்ள துறக்கவுலகிலுஞ் சென்று வைகுதலும்; அவர்தம் மூதாதைகள் இறந்தஞான்று அவர்களுள் ஒரு பகுதியாரை நெருப்பிலிட்டு எரித்தும், மற்றொருபகுதியாரை மண்ணின் கீழிட்டுப் புதைத்தும் வந்தனரென்பதனால் அப் பிதரர், பரிமேலழகியார் கூறியபடி "அயனாற் படைக்கப்பட்டதோர் கடவுட் சாதி" யாகாமையுந் தெற்றென விளங்காநிற்கும். ஆரியரின் மூதாதைகளான அப் பிதரர்கள், இயமன் உலகத்திலும் பகலவன் உலகத்திலுந் திங்கள் உலகத்திலுஞ் சென்று வைகுவரென அவ்விருக்குவேத ஒன்பதாம் மண்டிலத்தின் ௧௧௩-ஆம் பதிகத்து ௮, ௯, ௰-ஆஞ் செய்யுட்கள் மொழிகின்றனவே யன்றி, அவர் தென்புலத்தின்கட் சென்று வைகுவரெனக் கூறுகின்றிலது. மேலும், ஆரியர் தம்மைச் சேர்ந்தார் உயிர் துறக்குங்கால் இயமனை வேண்டிப் பாடிய பதிகத்தில், இறந்து செல்வோன் உயிரைநோக்கி,

> "ஓடுக! சரமாவின் குட்டிகளும், புழுப்புநிறத்தொடு பலவரிகளை
> யுடையனவும் நான்கு கண்கள் வாய்ந்தனவும் ஆகிய இரண்டு நாய்
> களையும் நின் இனிய வழியினிடையே விரைந்து கடந்துசெல்க!
> இயமனுடன் கூடி மகிழ்ந்திருப்பாரான இரக்க நெஞ்சமுள்ள
> மூதாதைகள்பால் விரைந்து அணுகுக!"

(இருக்குவேதம், ௰, ௧௪, ௰) என்று கூறுதல்கொண்டுந், தம் மூதாதையர் இயமனுலகத்திற்குச் செல்வதாகப் பண்டையாரியர் நம்பிவந்தமை நன்கு புலனாகாநிற்கும். இயமன் தென்புலத்திற்கு உரியவனாகப் பிற்காலத்தெழுந்த வடநூல்கள் நவலுங் கதை, பண்டை வடநூலாகிய இருக்குவேதத்தில் யாண்டுங் காணப்படாமை கருத்திற்பதிக்கற்பாற்று. அவர் சென்றுவைகும் இயமனுலகு, வானநாட்டின் நடுவண் உள்ளதாகவே முன்னர்க்காட்டிய ௧௫-ஆம் பதிகத்தின் ௧௪-ஆஞ் செய்யுள் ஐயமற வோதுதல் காண்க.

இன்னும், அவ்விருக்குவேதப் பத்தாம் மண்டிலத்தின் பதினாறாம் பதிகத்து ௩-ஆஞ் செய்யுளானது இறந்து செல்லும் ஒருவனுயிரை நோக்கிக் கூறுகின்றுழிப்,

> "பகலவன் நின்கண்களைப் பெறுக; காற்று நின் உயிர்ப்பைப்
> பெறுக; நின் வினைப்பயனுக்குத்தக மண்ணுலகத்திற்கோ
> விண்ணுலகத்திற்கோ நீ செல்க!
> நின்வினை அங்ஙனமாயின் நீ நீரினுட்செல்க; அல்லதுசெடிகளினுட்
> புகுந்து, நின் உறுப்புகள் எல்லாவற்றுடனும் ஆண்டு வைகுக!"

என்றுரைக்குமாற்றால், நல்வினைசெய்த உயிர் விண்ணுலகத்திற் சென்று

வாழுமென்பதும்; நல்வினை செய்யாத உயிர் மண்ணுலகத்தை யடுத்துப் பேய்களாக அலைந்து திரிதலே யல்லாமல், நீரினுட்புகுந்து நீரணங்காகவுங் கானகத்துள்ள செடிகளினூடே புகுந்து காட்டணங்காகவும் உறையுமென்பதும் பண்டையாரியர்தம் நம்பிக்கையாதல் நன்கு புலனாகின்றதன்றோ? இங்ஙனமெல்லாம் இறந்துசென்ற உயிர்கள் வைகும் இடங்கள் வான்நடுவணதான இயமனுலகும், ஞாயிறு திங்களுலகும், மண்ணுலகும், மண்ணுக்கும் விண்ணுக்கும் நடுவணதாம் உலகும், நீருங் காடுமேயாம் என இருக்குவேதம் நுவலக் காண்கின்றனமேயன்றி, அது தென்புலம் என நுவலுதலை அதன்கண் யாண்டுங் கண்டிலேம். அது நிற்க.

இனிப், பிதரரை ஒரு கடவுட்சாதியென்று கூறிய பரிமேலழகியாருரை ஒரு சிறிதும் பொருந்தாமை இருக்குவேத ஆராய்ச்சியால் தெற்றென விளங்குதலும் ஈண்டுக் காட்டுவாம். தேவர்கள் இயங்கும் நெறியையும், இறந்து செல்லும் பிதரர்கள் இயங்கும் நெறியையும், இருக்குவேதப் பத்தாம் மண்டிலப் பதினெட்டாம் பதிகத்து முதற்செய்யுளும், இரண்டாம் பதிகத்து ஏழாஞ் செய்யுளும் முறையே,

> "ஓ மிருத்யுவே, தேவர்கள் வழக்கமாய்ச் செல்லும் நெறியை
> அகன்று, நினக்குத் தனியேயுரிய நெறியின்கண் இங்கிருந்து
> புறப்பட்டுச் செல்க!" என்றும்,
> "அங்கியே, பிதரர்கள் செல்லும்நெறியை நன்குதெரிந்துகொண்டு,
> அதன் நெடுகச் சுடர்ந்தெரிந்து பேரொளிவிளக்கத்தைச்செய்க!"

என்றும் வேறுவேறு கூறுதலை உற்றுநோக்கவல்லார்க்குப், பண்டை ஆரியர்கள் தேவரையும் பிதரரையும் வேறுவேறாகக் கருதினரே யல்லாமற், பிதரரையுந் தேவராகக் கருதிற்றிலரென்னும் உண்மை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு விளங்காநிற்கும். ஆகவே, பண்டையாரியர் இயற்றிய வேத வழக்குக்கு முற்றும் முரணாகப், பிதரரைத் தேவரென்றுரைப் போர் வேதவழக்கைத் தழுவிய 'வைதிக' ராதல் யாங்ஙனம் என மறுக்க.

இருக்குவேதத்தை எழுத்தெண்ணிப் பயின்றவரும், அதனை முதன் முதல் அச்சிற் பதிப்பித்து, அதன் பதிகங்கள் பலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துதவியவருமான மாக்ஸ்முலர் என்னும் ஆசிரியர் (Professor Max Muller), "வேதத்தில் மூதாதையர் அல்லது பிதிரர் தேவர்களுடன் சேர்த்து வழுத்தப்படுகின்றனர்; என்றாலும், அவர்கள் மற்றவருடன் ஒன்றாகவைத்து மயங்கக் கூறப்படவில்லை. தேவர்கள் பிதரர்களாதல் எஞ்ஞான்றும் இல்லை. மனுவினாலும் யாஞ்ஞியவற்கியராலும் பிதரர்கள் ஒரோவொருகாற் பண்டைத் தேவகுப்பினர்நிலைக்கு உயர்த்தப்பட்டுத் 'தேவ' என்னும் அடைமொழியால் வழங்கப்படினும், பிதரருந் தேவருந் தனித்தனித் தோற்றமுடையரென்பதும், மக்கள் உள்ள

மானது தான் வழிபடுதற்கென்று வகுத்துக்கொண்ட இருவேறு நிலைகளைக் குறிப்பவென்பதும் நாம் எளிதிற் காண்டல்கூடும். இஃது என்றும் மறக்கப்படாத ஒரு பாடமாக இருத்தல்வேண்டும். இருக்குவேத, ௬-ஆம் மண்டிலத்து ௫௨-ஆம் பதிகத்தின் ௪-ஆஞ் செய்யுளில் இங்ஙனங் காண்கின்றோம்:

"மேலெழுகின்றவிடியற்காலம் என்னைக்காப்பதாக! ஓடுகின்றயாறு
கள் என்னைக் காப்பனவாக! திண்ணியமலைகள் என்னைக்காக்க!
தேவர்களை அழைக்கும் இப்போது பிதுரர்கள் என்னைக்காப்பாராக!

இச்செய்யுளில், விடியற்காலமும் யாறுகளும்மலைகளுந் தேவர்கள் வணக்க வுரையிற் சேர்த்துச் சொல்லப்படினும், அவற்றின் வேறான இருப்பு உடையாராகப் பிதுரர்கள் நுவலப்படுதல் இனிது விளங்குதல் காண்க.

"இதுவேயுமன்றி, மூதாதையருள்ளுந் துவக்கத்தி லிருந்தே இருவேறு வகையினர் கருதப்படுதலும் நாம் பகுத்துணர்ந்துகொள்ளல்வேண்டும்; அவருள் ஒரு பகுதியார் நெடுங்காலத்துக்கு முன்னரே இறந்துபோகி அரைவாசி மறக்கப்பட்டவர்களாய்ச், சில குடும்பங்களின் உண்மையில் இல்லாத முன்னோராவர், அல்லது, வேதநூற் புலவரின் கருத்துப்படி மக்கட்டொகுதி முழுதுமே யாவர்; மற்றொரு பகுதியார் சிறிது காலத்திற்கு முன்னரே இறந்துபோகி, இன்னும் பின்னுள்ளோரால் நினைந்து பணியப்படுவோ ராவர்.

"மிகப் பழைய மூதாதையர் பொதுவாகத் தேவர்களுக்கு அணுக்கராவர். இறந்துசென்ற உயிர்களுக்கு அரசனான இயமன்றன் உலகத்திற்குச் சென்று, அங்கே அவர்கள் தேவர் சிலருடன் கூடியிருப்பவராக அடிக்கடி நுவலப்படுகின்றனர். (இருக்குவேதம், ௭, ௭௬, ௪, தேவாநாம் சதமாதா; இருக்குவேதம், ௧௦, ௧௬, ௨, தேவாநாம் வசநீ:)

"இன்னும், பாட்டனுக்குப் பாட்டனுவார் துறக்கவுலகையும், பாட்டன்மாராவர் வானுலகையுந், தாதையர் மண்ணுலகையுஞ் சார்ந்திருப்பவராய், முதற்சொன்னவர் ஆதித்தியருடனும், இரண்டாவது சொன்னவர் உருத்திரருடனுங், கடைசியிற் சொன்னவர் வசுக்களுடனுங் கூடியிருப்பவராகக் கூறப்படுதலைச் சிலகாற் காண்கின்றேம்.

"இயமனே பிதுரரில் ஒருவனாக வைத்து வழுத்தப்படுதலுடன், அவன் மக்களுள் முதன்முதல் இறந்தவனென்றும், மூதாதையர் செல்லும் நெறியாகி மேற்றிசையிற் பகலவன் மறையுமிடத்துக்குச் செலுத்தாநின்ற 'பிதிரியானத்'தை மிதித்தவனுவன் என்றும் வழுத்தப்படுகின்றான்; (இருக்குவேதம், கப, ௨, ௭; ௧௦, ௧௪, ௧-௨). அவன் வைவசுவதன் என்றும் (௧௦, ௫௮, ௧), வைவசுவதன் மகன் என்றுஞ் (௧௦, ௧௪, ௯) சொல்லப்படுகின்றான். பின்வந்த அதர்வவேத காலத்தில் இயமன் மக்களுள் முதற்றோன்றியவனாகச் சொல்லப்படுகின்றான் (அதர்வவேதம், ௧௮, ௩, ௧௩; இருக்குவேதம், ௧௦, ௧௪, ௧-உடன் ஒத்துநோக்குக)"*

என்று மாக்ஸ்மூலர் என்னும் ஆசிரியர் கூறுதல்போலவே, வேத நூலாராய்ச்சி வல்ல கீத் (A. B. Keith) என்னும் அறிஞருந், "தேவர்கள் நெறியானது பிதுரர்கள் நெறியின் வேறாவதென்றே அடுத்தடுத்துச் சொல்லப்படுகின்றது; வழியில் நாய்கள் இருக்குமென்பதனால் அந்நெறியானது தனிப்பட்டதென்பதும், அமைதிவாய்ந்த தேவநெறியாகாதென்பதும் புலனாகின்றன."† என்று பெரிதாராய்ந் தெழுதியிருக்கின்றார்.

மேலே, மாக்ஸ்மூலர் ஆராய்ந்துரைத்த பகுதியாற், பிதுரர் இருவகையினராய், நெடுங்காலத்துக்கு முன்னரே இறந்துபட்டு அவர்க்குப் பின் வந்தாரால் மறக்கப்பட்டவரும், பிற்காலங்களில் இறந்துபட்டுப் பின்னுள்ளாரால் நினைவு கூரப்பட்டவரும் ஆதலும், அவர் துறக்கம் வான் நிலம் என்னும் உலகுகளைச் சார்ந்து வைகுவார் ஆதலும்; பிதுரர்களுக்குத் தலைவனான இயமனே பண்டொருகால் மக்களுள் ஒருவனாய் இருந்து முதன்முதல் இறந்துபட்டோனாதலும்; அவனும் பிதுரரும் இருக்குமிடம் பகலவன் மறையும் மேற்றிசைக் கண்ணதாதலும் நன்கு புலனாகின்றன. இவை யவ்வளவும் இருக்குவேதப் பதிகங்களால் ஐயமறத் தெரிக்கப்படுமாறும் மேலே அவைதம்மை எடுத்துக்காட்டி விளக்கியிருக்கின்றேம். எனவே, பிதுரராவார் "அயனாற் படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி" என்றும், "அவர்க்கிடந் தென்றிசை" என்றும் பரிமேலழகியாரும் அவரைப் பின்பற்றினாருங் கூறும் உரை, அவர்தாம் இறைவன் நூலாகக் கொண்ட பண்டை ஆரிய இருக்குவேத வுரைக்கே முற்றும் மாறாய் நிற்றல் கண்டு கொள்க.

இனி, வடக்கிருந்த ஆரியர்கள் இறந்துபோன தம் முன்னோரை நினைந்து வழிபட்டு வந்தாற்போலவே, தெற்கிருந்த தமிழர்களும் பண்டிருந்த தமது குமரிநாட்டின்கண் நாகரிகத்திற் றலைசிறந்தாராய் வாழ்ந்து சென்ற தம் முன்னோரை நினைந்து வழிபட்டு வந்தாராகல் வேண்டுமென்பது, தொடக்கத்தில் எடுத்துக்காட்டிய "ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்" என்னும் பழைய புறநானூற்றுச் செய்யுளிற் போந்த "தென்புலம் வாழ்நர்" என்னுஞ் சொற்றொடராலும், "தென்றிசைக்கண் வாழ்வோ ராகிய நுங் குடியில் இறந்தோர்" என்னும் அதன் பழைய வுரையாலும் நன்கு புலனாகின்ற தன்றோ? பண்டை

* Prof. Max Muller's 'India What Can It Teach Us?,' pp. 222—223.

† 'The Religion and Philosophy of the Vedas and Upanishads,' by A. B. Keith, D.C.L., D.Litt., p. 411.

நாளிலிருந்த ‘குமரிநாடு’ இப்போதுள்ள குமரி முனைக்குத் தெற்கே பெரும் பரப்பினதாய் இருந்தமையும், அதன்கட் பல்லாயிர ஆண்டுகட்கு முன் உயிர்வாழ்ந்த பழந்தமிழ் மக்கள் இம்மைமறுமைக் குரிய எல்லாத் துறைகளிலும் நாகரிகத்திற் றலைசிறந்து நின்றமையும், அந்நாட்டின்கட் செங்கோலோச்சிய நிலந்தரு திருவிற் பாண்டியன் அவைக்களத்தே தொல்காப்பியம் என்னும் ஒப்புயர்வற்ற செந்தமிழ்த் தனி முதல்நூல் அரங்கேற்றப்பட்டமையும், அஞ்ஞான்றிருந்த செந்தமிழ் மக்களின் நாகரிகத்தி லிருந்தே பிறநாடுகளி லிருந்த ‘ஆரியர்,’ ‘பாரசிகர்,’ ‘எபிரேயர்’ முதலான ஏனை மக்கட்பிரிவின ரெல்லாருஞ் சிறிதுசிறிதாக நாகரிகம் இன்னதெனத் தெரிந்து சீர்திருந்தினமையும், இன்னும் இதனையொட்டிய பிற வரலாற்றுக் குறிப்புகளும் மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும் என்னும் எமது பெருநூலில் விரித்து விளக்கியிருக்கின்றேம். அத்துணை நாகரிகத்திற் சிறந்த பண்டைத் தமிழ்மக்கள், தாம் இருந்த தென்புலமாகிய தமிழகத்தில் தமக்கு முன்னரே நாகரிகமுடையாராயிருந்து இறந்துபோன தம் மூதாதைகளையே ‘தென்புலத்தார்’ என வழங்கி வழிபட்டு வாழ்ந்து வந்தனரன்றித், தமக்கு எதொரு தொடர்புமில்லாத ஆரியர்தம் மூதாதைக ளாகிய ‘பிதுரர்’ களையாதல், இற்றைக்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன் ஆரியக் குருக்கண்மாராலுந், தமிழ்நாட்டுக் குருக்கண்மாராலுங் கட்டி யெழுதப்பட்ட புராணங்களிற் புதிது புகுந்த அயன் படைப்பான ‘பிதுரர்’களையாதல் வணங்கிவந்தவ ரல்லர். ஆரியக் குருக்கண்மார் புதிது கட்டிய கட்டுப்பாட்டில் அகப்பட்டுத் ‘திவசம்’ கொடுக்கின்ற இஞ்ஞான்றைத் தமிழர்களுங்கூடத், தம் தாய்தந்தையர், பாட்டன் பாட்டியர், பூட்டன் பூட்டியரை நினைந்து அது செய்யக் காண்கின்றனமே யன்றிப், பரிமேலழகியார் கூறும் அயன்படைப்பான பிதுரரை நினைந்து அங்ஙனஞ் செய்யக் காண்கின்றிலேம். இதனாலும், பரிமேலழகியாருரை பண்டைத் தமிழ்வழக்குக் காதல் பின்னைத் தமிழ்வழக்குக் காதல் சிறிதும் இசைந்து நில்லாமை, இதனை நடுநின்று காண்பாரெவர்க்கும் நன்கு விளங்காநிற்கும்.

இனி, ஆரியர் தம் மூதாதைகளை வழிபடும் முறையும், தமிழர் தம் மூதாதைகளை வழிபடுமுறையுந் தம்மிற் பெரிதும் வேறுபடுவ வென்பது காட்டுதும். ஆரியர்க்கு மிகப் பழைய நூலாகிய இருக்கு, எசுர், சாமம், அதர்வம் முதலிய நான்கு வேதங்களிலேனும், அவற்றின்கட் சொல்லப்பட்ட வேள்விகள் இங்ஙனம் வேட்கற்பால என அவற்றின் முறைகளை விரித்து அவ் வேதங்களுக்கு உரைநூல்களாய் எழுந்த பிராமணங்களிலேனும் உயிர்களுக்கு ஊழ்வினையும் மறு பிறவிகளும் உண்டென்பது எட்டுணையுங் காணப்படவில்லை. அதனால், இறந்த உயிர்கள் தாஞ் செய் ஊழ்வினையால் மீளப் பிறக்கும் என்னும் உண்மையைப் பண்டைநாளில்

இருந்த ஆரியர்கள் சிறிதும் உணர்ந்தவரல்ல ரென்பது நன்கு புலனாகும். ஆகவே, இறந்து இயமனுலகை யடைந்த தம் முன்னோர்கள் எஞ்ஞான்றும் இன்பம் நுகர்ந்தபடியாய் ஆண்டிருப்பரெனவே அவர்கள் நம்பிவந்தார்கள். அவ்வாறுகொண்ட தமது நம்பிக்கைக்கு ஏற்பவே, இறந்து சென்ற தம் பெற்றோர்க்கும் மூதாதையர்க்குஞ், சோமச்சாறு பால் தேன் சுரா நெய் முதலியவைகளையுந் தாம் உணவாக அருந்திவந்த விலங்கின் இறைச்சிகளையும் படைத்து, நாடோறுஞ் செய்யப்படுவதாகிய ‘பிதிர்யஞ்ஞத்’தையுந், திங்கடோறுஞ் செய்யப்படுவதாகிய ‘பிண்டபிதிர்யஞ்ஞத்’தையும், ஆண்டுதோறுஞ் செய்யப்படுவதாகிய சிரார்த்தத்தையுஞ் செய்து,

“தூய புல்லின்மேல் அமர்ந்திருக்கும் மூதாதையரே, வந்து
எமக்கு உதவிசெய்க; இப்படையலை நுங்களுக்காகச்
செய்துவைத்தோம்; அவற்றை ஏற்றுக்கொள்க.
மிக மங்களமான விருப்பத்துடன் வந்து, சிறிதும் வருத்தமின்றி
எங்களுக்கு உடம்பின் நலத்தையுஞ் செல்வத்தையுந்
தந்திடுக!” (இருக்கு, ௧௦, ௧௫, ௪) என்று அவர்களை வேண்டிக் குறையிரந்து வந்தார்கள்.

இதுவேயுமன்றிப், பழைய ஆரியர்கள் இறந்துபோன தம்மவர்க்குச் செய்துபோந்த சவச்சடங்கிற்குந், தமிழ்நாட்டவர் செய்து போந்த சவச்சடங்கிற்கும் உள்ள மாறுபாடு பெரியதொன்றாய்க் காணப்படுகின்றது. இறந்துபோன தம்மவர் உடம்பை ஆரியர் தீயிலிட்டுக் கொளுத்துதற்கு முன், முதலில் ஒரு வெள்ளாட்டையும் அதன்பின் ஓர் ஆவையும் (பசுமாட்டையுங்) கொன்று, அவற்றின் உடம்பிலிருந் தெடுத்த ஊனையுங் கொழுப்பையும் எலும்பின் மூளையையும் அப் பிணத்தின்மேல் முற்றும் பொதிந்து, அதன்பின் அதனைத் தீயிலிட்டுக் கொளுத்தி வந்தனரென்பது இருக்குவேத ௧௦-ஆம் மண்டிலத்து ௧௬-ஆம் பதிகத்தில் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்வாறு செய்வதனால், நெருப்பானது இறந்தவன் உடம்பைச் சுடாதென்று பழைய ஆரியர் நம்பிவந்தனர். இங்ஙனம் பிறவுயிரின் ஊனைப் பொதிந்து தம்மவர் உடம்பை எரித்தால், அவருடம்பை நெருப்புச் சுடாதென்று நம்பின ஆரியர், இறந்து இயமனுலகு சென்ற தம்மவர் எப்போதும் அங்கிருந்தபடியே இன்பம் நுகர்ந்திருப்பரெனவும், அவர்பொருட்டுத் தாம் இங்கே படைக்கும் ஊனும் உணவும் இயமனுலகிலிருக்கும் அவர்கள்பாற் சென்று அவர்கட்கு உண்டியாகப் பயன்படுமெனவும் நம்பிவந்தது வியப்பன்று; ஏனென்றால், “அம்புலியில் ஒளவையார் நூல் நூற்கின்றார்” என்றால், அதனை நம்புகின்றவர் கூட்டமும் இங்கு மிகுதியாய் இருக்கின்றதன்றோ?

மற்றுத், தமிழ்மக்களோ பண்டைக்காலந் தொட்டு “இறந்த வுயிர் மீளப் பிறக்கும்” என்னும் உண்மையைக் கண்டறிந்தவர் ஆவர். முற்

பிறவிகளிற் செய்த வினைகள் ஒரு தொகுதியாய் 'ஊழ்' என நின்று பிற் பிறவிகளுக்குக் காரணமாதலை அவர்கள் நன்கறிந்து, அதனைப் "பால் வரைதெய்வம்" என வழங்கிவந்தமை, தமிழர்க்குரிய மிகப் பழைய நூலாகிய தொல்காப்பியத்தால் தெளியப்படும்.* இறந்தவுயிர்கள் தாஞ் செய்து தொகுத்த ஊழ்வினைக்குத் தக மறுபிறவிகளிற் செல்லும் இவ்வுண்மையைக் கண்டறிந்தமையால், பண்டைத் தமிழ்மக்கள் இறந்துபட்ட தம் பெற்றோர்க்கும் பாட்டன் பாட்டியர்க்கும் ஊணும் உடையும் படைத்து, அவற்றை ஆரியப் பார்ப்பனர்க்குக் கொடுத்தலாகிய 'சிரார்த்தத்'தைச் சிறிதுஞ் செய்தவரல்லர். இப் பிறவியில் நமக்குத் தாய்தந்தையரா யிருந்தவர் இதனை விடுத்து மறுபிறவியில் வேறு தாய்தந்தையர்க்குப் பிள்ளைகளாய்ப் பிறக்கின்றனரல்லரோ? இது நாலடியாரிற் போந்த

"எனக்குத் தாயாகியாள் என்னை ஈங்கிட்டுத்
தனக்குத்தாய் நாடியே சென்றாள்—தனக்குத்தாய்
ஆகியவளும் அதுவானால் தாய்த்தாய்க் கொண்
டேகும் அளித்திவ் வுலகு" என்னுஞ் செய்யுளாலும், ஆசிரியர்

மெய்கண்டதேவ நாயனார் தாம் அருளிச்செய்த சிவஞானபோதச் செம்பொருணூலிற்,

"கண்ட நனவைக் கனவுணர்விற் றான்மறந்து
விண்படர்ந்தத் தூடு வினையினாற்—கண்செவிகெட்
டுள்ளதே தோற்ற உளம்அணுவாய்ச் சென்றுமனந்
தள்ள விழுங்கருவிற் றான்" என்றறிவுறுத்தியவாற்றானும் நன்கு

தெருட்டப்படுதல் காண்க. இதுவேயுமன்றி, வடநாட்டில் உள்ள இராமகாளி யென்னுஞ் சிறு பெண்பிள்ளையும், வேறு சிறார் சிலருஞ் சிலபல ஆண்டுகளுக்குமுன் தாம் பிறந்திருந்த பிறவிகளின் வரலாறுகளை நினைவுகூர்ந்து சொல்ல அவ்வரலாறுகள் அத்தனையும் உண்மையா யிருத்தலை அப் பக்கங்களில் உள்ளார் கண்கூடாய் அறிந்திருக்கின்றனர் அல்லரோ? இராமகாளி என்னும் அப்பெண் முற் பிறவியிற் பெற்ற மக்கள், அவளை நோக்கிச் செய்து பார்ப்பனர்க்குக் கொடுத்த ஊணும் உடையும் பிறபண்டங்களும் அவளுக்கு இப் பிறவியில் வந்து பயன்பட்டனவா? சிறிதும் இல்லையே. அதுபோலவே, இறந்துபட்ட தம் தாய்தந்தையரை நோக்கி நம்மனோர் இப்போது செய்யுஞ் சிரார்த்தமும், அதிற் பார்ப்பனர்க்கு அவர்கள் வழங்கும் பண்டங்களும் வேறு பிறவிகளிற் சென்று பிறந்திருக்கும் அவர்களுக்குச் சிறிதும் பயன்படாவென்பது திண்ணம். இவ்வுண்மைகண்டே வேதநூற் புலமையிற் சிறந்த தயானந்தசரசுவதி சுவாமிகளும் தாம் இயற்றிய சத்தியார்த்தப் பிரகாசிகை யின்கண், இறந்துபட்ட தம்மவரை நோக்கி நம்மனோர் சிரார்த்தஞ் செய்து பார்ப்பனர்க்கு

* சொல், ௫௭.

உணவுப் பண்டங்களும் பிறவும் வழங்கல் பயனற்றதென வற்புறுத்தி வரைந்திருக்கின்றார். ஊழ்வினையும் அதனாற் பிறவிகள் அடுத்தடுத்து வருதலும் அறியாத பண்டையாரியர், தம் மூதாதையர் எஞ்ஞான்றும் இயமனுலகில் இருப்பரென நம்பினராகலின், அவர் அவ்வறியா நம்பிக்கையால் தம் மூதாதையரை நோக்கிச் சிரார்த்தங் கொடுத்தது வாய்வதேயாம். மற்று, நம் பண்டைத் தமிழ்மக்களோ மிகப் பழையநாளிலேயே ஊழ்வினையின் இயல்பும், அதனால் உயிர்கள் அடுத்தடுத்துப் பிறவிகளிற் சேறலும் நன்காராய்ந்து கண்டவராகலின், அவர்கள் தம் மூதாதையரை நோக்கிச் சிரார்த்தங் கொடுத்திலர். மற்று, அவர் தமது பண்டைத் தமிழகத்திலிருந்து உலகமெங்கணும் நாகரிகத்தைப் பரவச்செய்த தம் முன்னோர்கள் அனைவரையுமே பொதுவாகத் 'தென்புலத்தார்' எனக்கொண்டு அவரை நினைவுகூர்ந்து நன்றிக்கடன் செலுத்தி வந்தனரென்பதே தேற்றமாம். இதுவே தென்புலத்தாரை ஓம்புதலாகு மென்று திருக்குறள் கூறிற்றென்க. அதனாலன்றோ, சிரார்த்தங் கொடுக்கும் முறைகளை வடமொழிக்கண் உள்ள மிருதிநூல்கள் கூறுமாப்போற், பழைய தமிழ்நூல்கள் எவையுஞ் சிறிதுங் கூறாவாயின. 'சிரார்த்தம்,' 'திதி,' 'திவசம்' முதலிய சொற்கள் வடமொழியே யன்றித் தமிழ்மொழி யல்லாமையுந், தமிழர்க்குள் அவ் வீண்வழக்கம் இல்லாமையின் அதனைக் குறிக்குந் தமிழ்ச் சொல்லும் இல்லாமையும் யாங் கூறும் இவ் வுண்மைக்கு உறுபெருஞ் சான்றா மென்க.

அற்றேற், பிதுரர்கள் தென்புலத்தில் உள்ளவர்களாகக்கூறும் வழக்கு யாங்ஙனம் வந்தது? எப்போது வந்தது? என்று அறிய விரும்புவார்க்கு, அவ் வரலாற்றினையும் ஈண்டொருசிறிது விளக்கிக் காட்டுதும். தேவர்கள் உறையுந் துறக்கவுலகம் வடகிழக்கில் உள்ளதெனவும், பிதுரர்கள் உறையும் பிதுரவுலகந் தென்கிழக்கில் உள்ளதெனவுங் கொள்ளும் வழக்கு முதன்முதற் சதபதபிராமணத்திலே தான் காணப்படுகின்றது.*

இச் சதபதபிராமணம் இயற்றப்பட்ட காலத்தில், ஆரியர்கள் பெருந்தொகையினராகத் தென்றமிழ்நாட்டிற் குடிபுகுந்திலரேனுந், தென்றமிழ் நாட்டிலிருந்து வடநாடு சென்று போந்த தமிழ்மக்கள் வாயிலாகவும், வடநாட்டிலிருந்து தென்றமிழ்நாடு புகுந்து திரும்பிய தமிழ்மக்கள் வாயிலாகவுந் தமிழ்மக்களின் நாகரிக வரலாறுகளை அறிந்துகொண்ட பண்டை அவ்வாரியர்கள், தாம் இயற்றிய இந்நூலின்கண் தமிழர் வணங்கிய முழுமுதற்கடவுளையும், அவர்தம் வழக்கவொழுக்கங்களையுஞ் சிறிது சிறிதாகத் தழுவி யுரைக்கலாயின ரென்பது ஆராய்ச்சியாற் புலனாகின்றது. தெற்

* சதபதபிராமணம், ௯-ஆம்கண்டம், ௯-ஆம்அத்தி. ௨-ஆம் பிராமணம்,௪.
,, ௧௨- ,, ௭- ,, ௩- ,, ௯.
,, ௧௩- ,, ௮- ,, ௧- ,, ௫.

இருந்து வடநாடுதொடுத்து இவ்விந்தியநாடுமுற்றும் அஞ்ஞான்று தமிழ்மக்களே நிரம்பியிருந்தனரென்பது இஞ்ஞான்றை வரலாற்றுநூலாசிரியர் நடுநின்று ஆராய்ந்தெழுதியிருக்கும் நூல்களால் தெற்றெனவிளங்காநிற்கும்.*

பாண்டவர் ஐவர்க்குங் குருகுலமன்னர் நூற்றுவர்க்கும் பதினெட்டு நாள் வரையிற் பெரும்போர் நடந்த ஞான்று, பாண்டவர்க்கு நண்பனுந் தென்றமிழ்நாட்டுச் சேரமன்னனுமான உதியஞ்சேரலாதன் என்பான் அப் பாண்டவர் படைக்கு அப் பதினெட்டுநாளும் அறச்சோறு வழங்கிப், 'பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன்' என அக் காலத்துச் சான்றோர்களால் உயர்த்துப்பேசப்பட்டமை முரஞ்சியூர் முடிநாகராயர் பாடிய 'மண்டிணிந்த நிலனும்'' என்னும் புறநானூற்று முதற்செய்யுளால் நன்கறியக் கிடக்கின்றதன்றோ? இவ்வுதியஞ் சேரலாதன் மகனாகிய பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் பதிற்றுப்பத்தின்கண் மூன்றாம்பத்திற் புகழ்ந்து பாடிய கோதமனார் என்னும் நல்லிசைப் புலவரே பாண்டவரில் முதல்வனான தருமபுத்திரனையும்புகழ்ந்துபாடிய ''விழுக்கடிப்பு அறைந்த'' என்னுஞ் செய்யுள் ஒன்றும் 'புறநானூற்'றிற் காணப்படுகின்றது. இங்ஙனமே வான்மீகியார், மார்க்கண்டேயனார் என்னும் நல்லிசைப்புலவர்கள் பாடிய செய்யுட்களும் 'புறநானூற்'றின்கட் காணப்படுகின்றன (௩௫௮, ௩௬௫). ''இனித் தமிழ்ச்செய்யுட் கண்ணும், இறையனாரும் அகத்தியனாரும் மார்க்கண்டேயனாரும் வான்மீகனாருங் கௌதமனாரும் போல்வார் செய்தன தலை'' யாய ஒத்து என்று உரையாசிரியர் நச்சினார்க்கினியர் தொல்காப்பியப், புறத்திணையியல், ௨௦-ஆஞ் சூத்திரவுரையிற் கூறுதல்கொண்டு, மேற்கூறிய முரஞ்சியூர் முடிநாகராயருங், கோதமனாரும், வான்மீகியாரும், மார்க்கண்டேயனாரும் எல்லாம் பாண்டவர் காலத்தவரென்பது உய்த்துணரக் கிடக்கின்றதன்றோ? ஆகவே, வடக்கே பாண்டவ அரசர் இருந்த மிகப் பழையகாலத்தே, இத்தென்னாட்டின்கண் மட்டுமேயன்றி, அவ் வடநாடெங்கணுந் தமிழ்மக்களுந் தமிழ் மன்னர்களுந் தமிழ்ச்சான்றோர்களும் நிறைந்திருந்தனரென்பது பண்டைத் தமிழ்ச் செய்யுள் வரலாறுகளானும் நன்கறியக் கிடக்கின்றமை காண்க.

இனிப், பழையநாளில் வடக்கே குடிபுகுந்த ஆரியர் தமிழ்மொழியின் இயல்பையும் அமைப்பையும் நோக்கியே தமது ஆரியமொழியினைச் சீர்திருத்தி, ஏராளமான தமிழ்ச் சொற்களையுந் தம்முடைய ஆரியநூல்களிற் புகுத்தினரென்னும் உண்மை இப்போது வடமொழி வல்ல மேல்நாட்டாசிரியர்களாலே நன்கெடுத்துக் காட்டப்பட்டு வருகின்றது.† அரை

* Read Prof. Rhys Davids' Buddhist India, pp. 44, 45, 56, 116, 119, 149, 151, 156, 211, and the chapter VIII of Ragozin's Vedic India. † See for instance 'The Cambridge History of Ancient India,' pp. 41-42.

நூற்றாண்டுக்கு முன்னமே கால்டுவெல் (Dr. Caldwell) என்னும் ஆசிரியர் தாம் அரிதாராய்ந்தெழுதிய 'திராவிட மொழிகளின் இலக்கண ஆராய்ச்சி' என்னும் விழுமியநூலில், தமிழ்மொழி இவ்விந்திய நாடெங்கணும் அதற்கப்பாலும் பரவியிருந்த உண்மையினை எவரானும் மறுக்க இயலாத அரியபெரிய சான்றுகளால் நன்கு நிறுவியிருக்கின்றார். அவரெடுத்துக் காட்டிய பல சான்றுகளுள், நாவிற்பிறக்கும் மெய்யெழுத்துக்கள் சில தமிழ்மொழியினத்திற்கே உரியனவென்றுந், தமிழருடன்வந்து கலவாதமுன் அவ்வெழுத்துக்களையுடையரல்லாத ஆரியர்கள், அவருடன் வந்து கலந்தபின்னரே அவற்றையெடுத்துத் தம் மொழியிற் சேர்த்துக் கொண்டனரென்றுந் தெள்ளிதின் விளக்கிக்காட்டியிருக்கின்றார்*.

இங்ஙனமெல்லாம் மேனாட்டாசிரியர் நடுநின்று மிக ஆழ்ந்தாராய்ந்துரைக்கும் உரை, இச் சதபதபிராமண ஆராய்ச்சியினாலும் மேலும் உரம்பெற்று உண்மையாக விளங்குதலை ஈண்டொருசிறிது காட்டுதும். இருக்கு, எசுர், சாமம், அதர்வம் என்னும் நான்கு நூல்களில் எங்குங் காணப்படாத 'மகாதேவன்' என்னுஞ் சிவபிரான் றிருப்பெயர் இச் சதபதபிராமணத்தின் ஐந்தாங் கண்டத்திலேதான் (௫, ௫) முதன்முதற் காணப்படுகின்றது. இதுகொண்டு, நாகரிகத்திற் சிறந்த தமிழ் முதுமக்கள் வழிபட்டுவந்த சிவபிரானே எல்லாத் தேவர்க்கும் பெரியோன் என்னும் உணர்ச்சி இந்நூல் எழுதிய காலையிற்றான் ஆரியர்க்கு முதன்முதல் உண்டாயிற்றென்பது நன்கு புலனாம். தாம் வணங்கி வேண்டிவந்த தேவர்களெல்லாருந் தம்போற் பிறந்து இறக்கும் மக்களுயிர்களே யல்லாமற், பிறந்திறவாச் சிவத்தோடு ஒத்தவராகா ரென்னும் மெய்யுணர்வு சதபத பிராமணகாலத் தாரியர்க்கு உண்டாயது, அஞ்ஞான்று அவர் தமிழ் மேன்மக்களுக்கு அடங்கி அவர்க்கு அணுக்கராய் ஒழுகி, அவர்பால் அம் மெய்யுணர்வினைப் பெற்றமையினாலேயாம். இவ் வுண்மை இச் சதபதபிராமணத்தின் இறுதிக்கண் உளதாகிய பிருகதாரணியகோப நிடதத்தை உற்று நோக்குதலாலும் நன்கு விளங்கும். 'கார்க்கிய பாலாகி' என்னும் ஆரியப் பார்ப்பனன் 'அஜாதசத்துரு' என்னுந் தமிழ்மன்னனையடுத்து அவனாற் சிவத்தினியல்பு அறிவுறுத்தப்பட்டவரலாறு, இப்பிருகதாரணிய கோபநிடதத்தின் கண்ணேயே விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது (௨, ௪). தமிழ அரசர்களையெல்லாம் அஞ்ஞான்றிருந்த ஆரியர் 'க்ஷத்திரியர்' என்று வழங்கின வரலாறுகளை எம்முடைய வேளாளர் நாகரிகம் என்னும் நூலிலுஞ் சாதிவேற்றுமையும் போலிச்சைவரும் என்னும் நூலிலுஞ் சான்றுகளுடன் விளக்கிக்காட்டியிருக்கின்றேம்.

* Dr. Caldwell's 'A Comparative Grammar of the Dravidian Languages,' 3rd edition, pp. 147-151.

இன்னும், பண்டைத் தமிழர்கள் முழுமுதற்கடவுளை அப்பன்வடிவிற் சிவபிரானாக வைத்து வணங்கியது போலவே, அதனை அருள்நிலையான அம்மைவடிவில் வைத்துத் திருமாலாகவும் வணங்கி[illegible] ஆகவே, வடநாட்டின்கண் இருந்த தமிழரொடு[illegible]ந்து அவரது சிவவழிபாட்டைத் தெரிந்துகொண்டு அதனை [illegible] பாராட்டிய சதபதபிராமணகாலத்தாரியர், அவர் செய்[illegible]ந்த திருமால் வழிபாட்டையுந் தெரிந்து அதனையும் [illegible]லன பதினொன்காங் காண்டத்திற் சிறப்பித்துப் பேசியிருக்கின்றார். "விஷ்ணு தேவர்களிற் சிறந்தோன்" என்னுஞ் சொற்றொடர் இதன்கட் காணப்படுகின்றது. 'விஷ்ணு' என்னுஞ் சொல் இருக்குவேதத்திற் காணப்படினும் ஆண்டது பகலவனையே குறிக்கின்றது. மற்றுச், சதபத பிராமணத்திலோ விஷ்ணு ஒரு தனித்தெய்வமாகவுந், தேவர்க்குள் நிகழ்ந்தபோரில் வெற்றிபெற்றுச் சிறந்த தலைமையுடையதாகவுஞ் சொல்லப்படுகின்றது. இவ்வாறு இத் தெய்வத்திற்கு ஆரியர் தலைமைகொடுக்கத் துவங்கியது, அவர் தமிழரது திருமால் வணக்கத்தைத் தெரிந்துகொண்ட பின்னரேயா மென்பது அறியற்பாற்று.

இன்னும், இதன் பத்தாங்காண்டத்தில் வேதங்கள் மூன்று (த்ரயீ வித்யா) என்றே நுவலப்படுகின்றன. இதனை உற்றுநோக்குங்கால், சதபதபிராமணம் எழுதப்பட்டகாலத்தில் ஆரியவேதங்கள் மூன்றேயிருந்தனவென்பதும், இதற்குப் பிற்பட்டகாலத்திலேதான் ஆரியர் அதர்வத்தையுஞ் சேர்த்து அவற்றை நான்காக்கின ரென்பதும், இவர் இங்ஙனந் தம் ஆரியவேதத்தை நான்காக்கியது தமிழர்கள் தமது வேதத்தை அஃது அறம் பொருள் இன்பம் வீடு நுதலுதல்பற்றி நான்கு கூறாக வழங்கியது கண்டேயா மென்பதும் இனிது விளங்காநிற்கும்.

இன்னும், இந்நூலின் பதினொன்காங்காண்டத்திலே 'சூத்திரம்' என்னுஞ் சொன் முதன்முதற் காணப்படுகின்றது. இதற்கு முற்பட்ட இருக்கு முதலான பழைய ஆரியநூல்களில் யாண்டும் இச்சொற் காணப்படுகின்றிலது. பண்டை யாரியநூல்களில் ஓரிடத்துங் காணப்படாத இச்சொல், முதன்முதல் இச் சதபத பிராமணத்தின்கட் காணப்படுதலை ஆராய்ந்துபார்க்குங்கால், இந்நூல் இயற்றியகாலத் திருந்த ஆரியர் தமிழரொடு கலந்து, அவர்தம் நூலில் வழங்கிய 'சூத்திரம்' என்னுஞ் சொல்லையெடுத்து, இதன்கண் வழங்கிக்கொண்டா ரென்பது தெற்றெனவிளங்காநிற்கும். இச் சதபதபிராமணம் இயற்றப்படுதற்குப் பன்னூற்றாண்டுகளுக்கு முன்னரே தோன்றியதாகிய தொல்காப்பியச் செந்தமிழ் நூலின்கண்,*

* தொல்காப்பியநூலின் காலம் இற்றைக்கு ௩௫00-ஆண்டுகளுக்கு முற்பட்டதாதல் எமது 'மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்' என்னும் நூலில் விரித்து விளக்கப்பட் டிருக்கின்றது.

"மேற்கிளந் தெடுத்த யாப்பினுட் பொருளொடு
சில்வகை யெழுத்தின் செய்யுட் டாகிச்
சொல்லுங் காலை யுரையகத் தடக்கி
நுண்மையொடு புணர்ந்த வொண்மைத் தாகித்
துளக்க லாகாத் துணைமை யெய்தி
அளக்க லாகா அரும்பொருட் டாகிப்
பல்வகையானும் பயன்றெரி புடையது
சூத்திரத் தியல்பென யாத்தனர் புலவர்" (மரபியல், ௧00) என்று

போந்த சூத்திரத்தாற் 'சூத்திரம்' என்னுஞ் சொல்லும், அதனால் உணர்த்தப்படும் பாவின் இலக்கணமும் நன்கு அறிவுறுத்தப்பட்டமை காண்க. இவ்வாற்றாற் 'சூத்திரம்' என்பது தனித்தமிழ்ச் சொல்லேயாதலும், அதனைத் தமிழ்மக்களிடமிருந் தெடுத்தே சதபதபிராமணகாலத்தாரியர் வழங்கிக்கொண்டாராதலும் ஐயுறவுக்கு இடனின்றி நிறுவப்படுதல் காண்க.

இன்னுந், தெற்கே தமிழ்நாட்டின் ஒரு பெரும்பகுதியாகிய குமரிநாடு கடல்கொண்டழிந்த வரலாறு, இச் சதபதபிராமணத்தின் முதற்காண்டத்தின்கண் (௮, ௧, ௧) விரிவாகச் சொல்லப்பட் டிருத்தலால், இந்நூல் அக் கடல்கோளுக்குப் பின்னர் இயற்றப்பட்டமையும், இதனை அக்காலத்து ஆரியர் வடநாடு போந்த தமிழர்பாற் கேட்டுணர்ந்து அதன்கட் குறிப்பிட்டமையும் நன்கு பெறப்படும்.

அதுவேயுமன்றிப், பாண்டவர் ஐவர் காலத்திற்குப்பின் இச் சதபத பிராமணம் இயற்றப்பட்ட தென்பதற்கு, அசுவமேதஞ் செய்து கொலைப் பாவத்தைக் கழுவிக்கொண்டவராகச் சொல்லப்படும் 'ஜநமேஜய' மன்னனும் அவனுடன்பிறந்தாரான 'பீமசேனன்,' 'உக்கிரசேனன்,' 'சுருதசேனன்' என்னும் மூவரும் இதன் ௧௩-ஆங் காண்டத்திற் சொல்லப்பட் டிருத்தலே உறுபெருஞ் சான்றாம். இம் மன்னர் நால்வரும் பாண்டவ அரசரின் வழித் தோன்றல்கள் ஆதல், பாரத கதையினை யுணர்ந்தார் எவரும் நன்கறிவர். எனவே, தலைச்சங்கத் திருந்து தமிழாராய்ந்தவரும், பாண்டவர் காலத்தவனான பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதனுக்கு நண்பரும் ஆன முரஞ்சியூர் முடிநாகராயர் என்னும் புலவர்பெருமான் காலத்திற்குச் சிறிதேறக்குறைய ஒரு நூற்றாண்டு கழிந்த பின்னரே 'சதபதபிராமணம்' இயற்றப்பட்டதாகல் வேண்டுமென் றுணர்ந்துகொள்க.

மேலுஞ், சதபதபிராமணத்திற் குறிக்கப்பட்ட தமிழ்நாட்டுக் கடல்கோளுக்கு முன் 'பஃறுளி' யாற்றங்கரைப் பக்கத்தே பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்னும் வேந்தர்பெருமான் அரசு செலுத்தின வரலாறு, மேலெடுத்துக்காட்டின "ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்" என்னும் புறநானூற்றுச் செய்யுளால் இனிது விளங்குதலின், சதபதபிராமணகாலம் இப்பண்டைப் பாண்டிவேந்தன் காலத்திற்

கும் பிற்பட்டதாதல் தெற்றெனப் புலனும். அத்துணைப் பழையகாலத்திருந்த இப்பாண்டி வேந்தன் சிவபிரான் திருவடிக்கண் மிக்க அன்புடையனு யிருந்தனனென்பது,

"பணியியரத்தை நின்குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே" என்று காரிகிழார் என்னும் புலவர் பெருமான் அவனைச் சிறப்பித்துப் பாடிய புறநானூற்றுச் செய்யுளால் (சு) நன்குணரப்படும். சிவநேயத்திற் சிறந்த இப் பாண்டிய மன்னனை அக் காலத்திருந்த ஆரியக் குருமார் தம் வயப்படுத்தி, அவன் பல யாகங்களைச் செய்யும்படி தூண்டிவிட்டன ரென்பதனுல், அவ்வாரியக் குருமார் அத்துணைப் பழையநாளிலேயே நம் தமிழ்நாடு புகுந்து நம் அரசர்களையுஞ் செல்வர்களையுந் தம் வயப்படுத்தித், தமது வேள்விச் சடங்குக்கு அவர்களை உடன்படுத்திக் கொண்டமை நன்கு புலனுகின்றதன்றோ? இவ்வாறு அவ் வேந்தன் ஆரியக்குருமார் சூழலில் அகப்பட்டுப் பல வேள்விகளைச் செய்ததனுலேயே 'பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமி' எனப் பெயர் வழங்கப்பெற்றான்.

இங்ஙனமாக, ஆரியக்குருமார் மிகப்பழையநாளிலேயே வடநாட்டிலிருந்த தமிழ்மன்னர்களான பாண்டவர் முதலாயினுரைத் தம் வயப்படுத்திக்கொண்டாற் போலவே, அவர் தென்றமிழ்நாடு புகுந்து இங்கிருந்த வேந்தர்களையுந் தம்வயப்படுத்திக் கொண்டார். இங்ஙனம், இவர் தமிழ் வேந்தர்களைத் தம்வயப்படுத்திக் கொண்டாலும், அவர்க்குரிய கடவுள் வழிபாடும் ஏனை நல்லொழுக்க முறைகளும், மிக விழுமியவாய் இருந்தமையின், அவைதம்மை அழிக்கமாட்டாராய்ச், சில திரிவுபாடுகளுடன் அவற்றைத் தாமுங் கைக்கொண்டு, தம் நூல்களில் வரைந்து வைத்து ஒழுகலாயினர். இவ்வாறவர் தமிழர்பாலிருந் தெடுத்துத் தாம் கைக்கொண்டொழுகிய ஒழுகலாறுகள் பலவற்றுள் 'தென்புலத்தார்' கடனும் ஒன்றாகும்.

இனி, இச் சதபதபிராமண காலத்திற்கு முற்பட்டவனுகிய 'பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி' மேல் நெட்டிமையார் என்னும் நல்லிசைப் புலவர் பாடிய "ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்" என்னுஞ் செய்யுளில், தென்புலத்தார்க்கு நன்றிக்கடன் செலுத்துந் தமிழரின் ஒழுகலாறு நுவலப்பட்டிருத்தலின், இச் சதபதபிராமணம் இயற்றப்படுதற்கு முன்னமே நம் பண்டைத்தமிழ்மக்கள் தெற்கே குமரிநாட்டிலிருந்த தம் மூதாதையரை ஒருங்கே நினைந்து இறைவனை வழிபட்டு வந்தமை தெற்றென விளங்காநிற்கும். இங்ஙனந் தெற்கிருந்த தம் மூதாதையர்க்கு நன்றிக்கடன் செலுத்திவந்த தமிழரது ஒழுகலாறு, இருக்கு எசுர் முதலான மிகப்பழைய ஆரியநூல்களுள் யாண்டும் நுவலப்படாமையின், அக்காலத்து ஆரியர்க்கு அது தெரியாதென்பதூஉம், மற்று அந் நூல்களுக்குப் பிற்பட்டு வந்த சதபதபிராமணத்தில் அவ்வொழுகலாறு நுவலப்பட்டிருத்தலின் அப் பிற்காலத் தாரியர்க்கே அது தெரியலாயிற்றென்பதூஉம் ஐயுறவுக்கிடனின்றி நாட்டப்பட்டமை காண்க.

இனி, ஆரியர் இவ்விந்தியநாட்டிற் புகுந்த காலந்தொட்டே, தமக்கு ஊண்கொடுத்து உடைகொடுத்து இருக்க உறையுள் கொடுத்துப் பலவகையால் உதவியாற்றி வந்த தமிழ்மக்களைத் 'தஸ்யுக்கள்,' 'தாசர்கள்,' 'இலிங்கத்தை வணங்குபவர்கள்,' 'வேள்விச் சடங்கு செய்யாதவர்கள்,' 'அசுரர்கள்,' 'இராக்கதர்கள்' என்று இகழ்ந்து வந்தமையோடு, அவர்களைச் சுவடற அழித்துவிட வேண்டுமென்றுந், தாம் வணங்கிய 'இந்திரன்,' 'வருணன்' முதலான தேவர்களை ஓயாமல் வேண்டிவந்திருக்கின்றார்கள். இக்காலத்துந் தம்மைச் 'சாமி, சாமி' என்று பலவகையாற் கொண்டாடித், தமக்கு வேண்டிய உதவிகளையெல்லாஞ் செய்துவருந் தமிழ்மக்களை, அவ்வினத்தவர் 'சூத்திரர்' என்னும் மிக இழிவான சொல்லால் வழங்கிவருதல் எவரும் அறிந்ததன்றோ? இங்ஙனம் பண்டைநாள் தொட்டு இன்றுகாறும் ஆரியரும் அவர் குழுவிற்சேர்ந்து அவர் வண்ணமாயினுருந் தமிழரை நஞ்சாகப் பகைத்து வரும் வரலாறுகளை வேளாளர் நாகரிகம், சாதி வேற்றுமையும் போலிச் சைவரும் என்னும் நூல்களில் விரித்து விளக்கிக்காட்டி யிருக்கின்றேம். இவ்வாறு தமிழர்பால் ஆரியர்க்கு இயற்கையேயுள்ள நச்சுப்பகைமை, இச் சதபதபிராமண காலத்து ஆரியர்மாட்டுங் காணப்படுகின்றது. இவ் ஆரியர்கள் தாம் தேவரெனவுந், தாம் உறையும் வடதிசைக்கண் மட்டுமே தேவர்கள் உறையுந் துறக்கவுலகம் உண்டெனவுந், தாம் மட்டுமே அத் துறக்கவுலகு செல்லத் தம்மவரல்லாத தமிழர்களாகிய அசுரர்களெல்லாந் தெற்கேயுள்ள கூற்றுவனுலகு செல்வரெனவும் வரைந்திருக்கின்றனர்; அதுவருவாறு:—

சதபதபிராமணம், கஉ-ஆங் காண்டம், எ-ஆம் அத்தியாயம்,
ங-ஆம் பிராமணம், எ.

"இரண்டு வேதிகள் இருக்கின்றன, 'தேவருலகும் பிதுரருலகும் என ஈருலகுகள் உண்டு' என்று அவர்கள் சொல்லுகின்றார்கள். ஒன்று (ஒருவேதி) வடக்கிலும் மற்றொன்று தெற்கிலும் இருக்கின்றன; ஏன் என்றால், தேவர்களுலகு வடக்கிலும் பிதுரர்களுலகு தெற்கிலும் உள்ளன; வடபால் உள்ளதனுல் அவன் தேவருலகைப் பெறுகின்றான், தென்பால் உள்ளதனுல் அவன் பிதுரருலகைப் பெறுகின்றான்."

கங-ஆங் காண்டம், அ-ஆம் அத்தியாயம், க-ஆம் பிராமணம், ரு.

"தேவர்கள், தமக்கு எதிரிகளும் பகைவருமான அசுரர்களை அவர்களிருந்த இடங்களினின்றுந் துரத்திவிட்டார்கள்; இருக்க இடமில்லாமையால் அவர்கள் வெல்லப்பட்டார்கள். ஆனதனுற்றான், தேவரினத்தைச்

சேர்ந்த மக்கள் தாம் புதைக்கும் இடங்களை நாற்கோண வடிவினதாக அமைக்கின்றனர்; மற்று, அசுர இனத்தைச் சேர்ந்த கீழ்நாட்டவரும் (சூத்திரரும்) பிறருமோ தேவர்களால் தாம் தம் இருப்பிடங்களினின்றுந் துரத்தப்பட்டவர்களாதலால், அவற்றை வட்டவடிவினதாக அமைக்கின்றனர். அவன் அவ்விடத்தைக் கிழக்கிற்குந் தெற்கிற்கும் இடையிலே தங்குமாறு அமைத்தான்; ஏனென்றாற், பிதுரர் உலகிற்குச் செலுத்தும் வாயில் மெய்யாகவே அவ்விடத்திலேதான் இருக்கின்றது.”

இவ்வாறிவர்கள் வரைந்திருப்பதுகொண்டு, வடபால் உள்ளதுதான் தேவர்கள் உறையுந் துறக்கவுலகமாம் என்பதுந், தென்பால் உள்ளதுதான் பிதுரர்கள் உறையும் நரகவுலகமா மென்பதும், ஆரியராகிய தாமெல்லாந் துறக்கவுலகு செல்லத் தமிழராகிய பிறரெல்லாந் தெற்கேயுள்ள நரகவுலகே செல்வரென்பதும் இவ் வாரியர்க்குக் கருத்தாதல் நன்கறியப்படும். எனவே, தமிழர்க்கு நரகப்பேறல்லது வேறில்லையென்றும், பிதுருலகென்பது நரகவுலகேயன்றிப் பிறிதன்றென்றும் இவ்வாரியர் கொண்டமை நினைவில் இருத்திக்கொள்க. இங்ஙனந் தமிழர்மேல் வைத்த நச்சுப் பகைமை காரணமாகவே, தெற்கே நாகரிகமுடையராயிருந்து இறந்துபட்ட தமிழர்தம் மூதாதைகளுக்குரிய தென்றிசையை, உயிரைக் கொள்ளைகொள்ளுங் கூற்றுவனுலகாகவும் அவர்தம் பிதுருறையும் அவ்வுலகை நரகவுலகாகவுஞ் சதபதபிராமணகாலத் தாரியர் எழுதிவைத்தனர். அவர் இத்துணை இழிவுபடுத்தி எழுதிவைத்ததனை ஆராய்ந்துபார்க்கமாட்டாத இஞ்ஞான்றைத் தமிழர்களும் பிதுருலகு தென்றிசைக்கண் உளதென்னும் அவருரையைத் தழுவி, அதற்கியைய ஒழுகலாயினர் கண்டீர்! இங்ஙனந் தென்றிசைக்கண் உறைவார் ‘பிதுரர்’ என்று கூறிய ஆரியர்க்கு, அவரை அயன்படைப்பான தேவர் என்று மாற்றிச்சொல்வதற்கு மனம் ஒருப்படுமோ? ஒருப்படாதன்றே; ஆனதனாற்றான், சதபதபிராமணத்தின்கண் யாண்டும் ‘பிதுரர்’ தேவர்குழுவிற் சேர்த்துச் சொல்லப்படாமல், தேவர்களுறையும் வடதிசைக்கு எதிரான தென்றிசைக்கட் கூற்றுவனுலகில் உறைபவராகச் சொல்லப்பட்டனரென்க. ஆகவே, பரிமேலழகியார் உரைத்தவுரை ஆரியவேத நூலுக்கும், அதற்குரையாயெழுந்த சதபதபிராமணத்திற்கும் முற்றும்மாறுதல் கண்டுகொள்க.

அற்றேல், பரிமேலழகியார் ‘பிதுரரை’ அயன்படைப்பான கடவுட்சாதி யென்றது எங்கிருந் தெடுத்தெனிற் கூறுதும். வடமொழியில் இஞ்ஞான்று காணப்படும் புராணங்களிற் பெரும்பாலன, தென்னாட்டின்கண் உள்ள சைவர் வைணவர்களால் ஆக்கப்பட்டனவாகும். இச் சைவ வைணவரிற் பெரும்பாலார் பண்டைத் தமிழரின் வழிவந்தவரே யல்லாமல் ஆரியரின் வழிவந்தவரல்லர். என்றாலும், ஆரியர் இந்நாட்டிற் குடிபுகுந்து இங்குள்ள அரசர்களையுஞ் செல்வர்களையுந் தம்வயப்படுத்தித் தம்

முடைய ஆட்சியையும் முதன்மையையும் நாட்டவே, அவருடைய சிறுதெய்வவணக்க வெறியாட்டு வேள்விகட்குச் சிறிதும் உடம்படாத சைவ வைணவர், ஆரியக் கோட்பாட்டை மறுத்துத் தாம் வணங்கிப் போந்த சிவபிரான்வழிபாட்டையுந் திருமால் வழிபாட்டையும் நிலைநிறுத்துதற்கு, ஆரியர் கொணர்ந்த வடமொழியையே கருவியாய்க்கொண்டு புராணங்களும் ஆகமங்களும் இயற்றினர். இங்குவந்த ஆரியர் தம்மை நிலத்தேவர் (பூசுரர்) என்றுந், தாம் வழங்கிய மொழியைத் தேவமொழி யென்றுஞ் சொல்லி இங்குள்ள அரசர்களையும் பிறரையும் நம்பச்செய்து, இங்கு எவர்க்குமில்லாத ஒரு பெருஞ் சிறப்பையும் ஒரு பெரும் பாராட்டையுந் தமக்கு உண்டாக்கிக் கொண்டமையினாலே, அவர்களுடைய கோட்பாடுகளை மறுத்துத் தம்முடையகோட்பாடுகளை நிலைநிறுத்தவேண்டிய இன்றியமையாமையினையும், அங்ஙனஞ் செய்வது தமிழிலன்றி அவர் சிறந்தெடுத்துப் பாராட்டவைத்த தேவமொழி யென்னும் வடமொழியின்கட் செய்ய வேண்டிய இன்றியமையாமையினையும், அங்ஙனம் அதன்கட் செய்வதூஉம் மக்களாகிய தம் பெயராற் செய்யப்படின் ஆரியராலும் அவர்வயப் பட்டாராலுங் கைக்கொள்ளப்படா தாகலின் தம் பெயரை மறைத்துக் கடவுட் பெயரால் அமைக்கவேண்டும் இன்றியமையாமையினையும் நன்குணர்ந்த சைவவைணவர் தத்தந் தெய்வங்களே அப்புராணங்களையும் ஆகமங்களையும் வடமொழியில் ஆக்கலாயின வென அவற்றில் வரைந்து வைத்தனர். இவ் வடமொழிநூல்களெல்லாந் தமிழ்நாட்டிலுள்ளவர்களாலே இற்றைக்குத் தொள்ளாயிர ஆண்டுகளுக்கு முன்னே தொட்டு நெடுக ஆக்கப்பட்டு வந்தமைக்குச் சான்றுகளும் அந்நூல்களின் பிறவரலாறுகளும் எமது மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும் என்னும் பெருநூலில் விரித்து விளக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு புராணங்களும் ஆகமங்களும் வடமொழியில் எழுதப்பட்ட பிற்காலத்திலேதான் தென்புலத்து மூதாதையரான பிதுரர்களுந் தேவர்களாக உயர்த்திநந் தமிழர்களால் எழுதிவைக்கப்பட்டார்கள். ஆரியர்கள் தமிழரை அசுரர்களென்றும், அவருறையுந் தென்றிசையைக் கூற்றுவனுலகென்றும், அதன்கண் இருந்து இறந்துபட்ட மூதாதையரை அக் கூற்றுவனுலகு சென்று வைகும் பிதுரரென்றும் இழித்துக் கூறினாராகலின் அவ் இழிவை மாற்றவே, புராண ஆகமங்களெழுதிய தமிழக்குருக்கண்மார் அவரை அயன்படைப்பான கடவுட்சாதி யென்று அந்நூல்களில் வரைந்துவைத்தாராதல் வேண்டும். அதனைத் தழுவியே பரிமேலழகியாரும் அவரைக் கடவுட்சாதி யென்று எழுதிவிட்டாரென்க.

முற்செய்த நூல் இது பிற்செய்த நூல் இது வென்று வரலாற்று முறையில் நின்று ஆராய்ந்துபாராமையினாலேயே தமிழ் ஆரியம் முதலான மொழிகளை நன்கு கற்றவர்களும் நூல்களின் உண்மையும் நூலா

210465

சிரியர் கருத்தும் உணராராய்ப் பழையவற்றைப் புதியவாகவும் புதியவற்றைப் பழையவாகவும் மயங்கக்கொண்டு, உண்மையைப் பொய்யாகவும் பொய்யை உண்மையாகவும் நம்பிப் பெரிதும் பிழைபடுகின்றார். அதுவேயுமன்றி, ஆரியமொழிநூல்களில் எஃது எங்ஙனம் எழுதப்பட்டிருந்தாலும் அதனை அங்ஙனமே நம்பி அறியாமையில் அமிழ்ந்திக் கிடப்பதும் நம்மனோர்க்குள் வேரூன்றிய வழக்கமாய்விட்டது. அதுவல்லாமலும், ஆரியர் தமிழர்க்குச் செய்துபோந்த தீமைகளை எடுத்துச்சொல்லி, இனித் தமிழர் அத் தீமைகளினின்றும் விலகி முன்னேற்றமடைதற்குரிய வழிவகைகளைக்காட்டினால், அதனையுங் குற்றமாகச்சொல்வார் தந்நலம் பாராட்டுந் தமிழரிற் பலர் உளராகலின், அவராலும் ஆராய்ச்சியறிவு தடைப்படுகின்றது. என்றாலுந், தென்புலத்தில் மிக்க நாகரிகமுடையரா யிருந்து காலஞ்சென்ற தம் மூதாதையர் அனைவரையும் ஒருங்குசேர்த்து நினைந்து, அவர்க்கு மேன்மேல் நலம் அருள்கவென்று எல்லாம்வல்ல இறைவனை வேண்டி நன்றிக்கடன் செலுத்துவதே, அம் மூதாதையர் வழிவந்த தமிழ் மக்களாகிய நமக்கு உரியதாமென்பதூஉம், அதனையே பண்டைத் தமிழ்ச் சான்றோராகிய ஒட்டிமையாரும் அவர்வழி பிழையாது வந்த தெய்வப் புலமைத் திருவள்ளுவனாரும் அருளிய செந்தமிழ்ப்பாட்டுகள் அறிவுறுத்துகின்றன வென்பதூஉம், நம் தமிழ்மக்கட் குரித்தல்லாத பிதுரர் வழிபாட்டைத் "தென்புலத்தார் தெய்வம்" என்னுந் திருக்குறளுக்கு ஏற்றிச் சொல்லிய பரிமேலழகியாருரை கொள்ளற்பால தன்றென்பதூஉம் இவ்வாராய்ச்சிக் கட்டுரையின்கண் எடுத்துக்காட்டி நம் மக்களை மெய்ந்நெறியில் உய்த்தல் இன்றியமையாததாதல் காண்க.

கூடுமென்பதில் யான் இப்போது உறுதிகொண் டிருக்கின்றேன்' என மறுமொழி தந்தாள்."

இவ் வுண்மையை எம் அருமைப் புதல்வி நீலாம்பிகையினிடத்துக் கண்ட வரலாற்றினையும் இங்கு ஒரு சிறிது வரைகின்றேம். நீலாம்பிகை தன் தலைமகள் மங்கையர்க்கரசியைக் கருக்கொண்டிருந்த ஞான்று, நோயில்லாத உடல்நலமும், அறிவுநலமும், மனக்களிப்பும் வாய்ந்து திருஞானசம்பந்தப் பெருமான் வரலாற்றை அடுத்தடுத்து ஓதுவதிலுஞ், செந்தமிழ்க்கட்டுரைகள் எழுதுவதிலும் உள்ளம் ஈடுபட்டு நின்றனர். இத்தகைய சிறந்த உடல்நல மனநலங்கள் வாய்ந்தபோது உண்டாகிப் பிறந்தமையால், மங்கையர்க்கரசி யென்னும் அவர்தஞ் சிறுமி திண்ணிய உடல்நலமுந் தெளிந்த அறிவுங் கல்வியில் விருப்பமும் அமைதியும் வாய்ந்தவளாய்க், காண்பாரெல்லார்க்கும் பெற்றார்க்கும் வியப்பும் மகிழ்ச்சியும் விளைத்து வருகின்றாள். மேலுங், கடவுளில்லையென்னு பாழ்ங்கொள்கை பேசித் திருஞானசம்பந்தப் பெருமான் முதலான நம் தெய்வஆசிரியரை இகழ்ந்து ஆரவாரம்புரிந்த ஒரு புதுக் கூட்டத்தாரை எதிர்த்து, அவருடைய பாழ்ங் கொள்கைகளை மறுத்து, யாம் அஞ்சா ஆண்மையோடும் உள்ளக்கிளர்ச்சியோடும் ஓரவைக்களத்திற் பேசியஞான்று, மங்கயர்க்கரசியைக் கருக்கொண்டிருந்த நீலாம்பிகையும் அவ் வவைக்களத்திற் போந்து எமது விரிவுரையினைக் கேட்டனர். அங்ஙனங் கேட்டமையால், யாம் அப்போது இருந்த ஆண்மைநிலை அம்மகவின் மூளையில் நன்கு பதியப்பெற்றுப் பிறந்தமையின், அது பிறந்துவளர்ந்த சிலதிங்களில் எல்லாம் ஆண்மைத்தன்மையொடு கைகளைமடக்கியெடுத்துக் கண்களைப் பரக்க விழித்து நகைத்து விளையாட்டுக் காட்டும்.

இங்ஙனமெல்லாந் தாயானவள் தன் நினைவுக்கு ஏற்றபடியாகவும், அந்நினைவினைத்தாக்கும் உணர்வுகளுக்கு ஏற்றபடியாகவுந் தன் வயிற்றகத்தே உருவாகுங் கருவின் இயற்கையை அமைப்பவளாய் இருக்கின்றன ளென்பதை எல்லாரும் நினைவிற் பதித்து வைத்தல்வேண்டும். இத் தமிழ்நாட்டின்கண் உள்ள மாதர்களில் மிகச் சிலரைத்தவிர மற்றையோரெல்லாருங் கல்வியறிவு சிறிதும் இல்லாத விலங்குகளாகவே இருத்தலாலும், அவர்கட்குப் பெற்

றோராகவும் உடன்பிறப்பின ராகவுங் கணவராகவும் வாய்ப்போரும் அவர்களைப்போலவே கல்வியறிவு பெறாத விலங்குகளாயிருத்தலாலும், இவர்களிடையே பிறக்கும் பிள்ளைகளும் இவ்விலங்கின் குட்டிகளாய் இருக்குமல்லது, அழகிலும் அறிவிலும் அன்பிலுஞ் சிறந்த உயர்ந்த மக்கட் பிறப்பினராதல் யாங்ஙனங் கைகூடும்? எந்த நாட்டிற் கல்வியுங் கற்றோர் கூட்டமுங் கல்விக்கேற்ற உயர்ந்த நாகரிகவாழ்க்கையும் மிகுந்திருக்கின்றனவோ, அந்நாட்டிலேதான் வழிவழியாக உயர்ந்தமக்கள் உண்டாகுவர். பாருங்கள்! உலகமெங்கணுங் கல்வியறிவு ஆராய்ச்சியிலும் நாகரிக வாழ்க்கையிலுந் தலைசிறந்தாராய்த் திகழும் மேல்நாட்டு வெள்ளைக்கார நன்மக்களின் கால்வழியில் வருவோரெல்லாம் அவரையொப்பவே முன்னேற்றத்தில் முனைந்து நிற்கின்றனர். மேல்நாட்டவருள்ளும் ஸ்காத்லாந்து தேயமக்கள் ஏனை நாட்டவரைவிடக் கல்வியறிவு ஆற்றல் தொழின்முயற்சி முதலிய எல்லாவற்றிலுந் தலைசிறந்து நிற்கின்றார்கள்; இதற்குக் காரணம் என்னென்றால்: "ஸ்காத்லாந்திலுள்ள குடியானவர்கள் தம்முடைய குடிசைகளைப் பள்ளிக்கூடங்களாக்கிவிடுகின்றனர்; மாலைக்காலத்திற் கதகதப்புக்காக வளர்க்குந் தீயின் பக்கத்தே கைந்நாற்காலியிலமர்ந்திருக்குந் தந்தையானவன் தான் அறிந்த செய்திகளைத் தன் பிள்ளைகளுக்கு அறிவிப்பதில் தவறுவதில்லை. அவனுக்குள்ள கலையறிவு சிறியதும் அன்று; ஐரோப்பாதேய வரலாறு முற்றுந், தனது பிரித்தானிய தீவின் இலக்கியங்களும், அவற்றுள்ளும் முதன்மையாய்த் தெய்வத்தைப்பற்றிய நூல்களும், பாடல்களும், ஸ்காத்லாந்து நாட்டின் வரலாறும் அவன் நன்கறிந்திருப்பன். வரலாற்று நூல் எழுதுவார்க்குந் தெரியாத வீட்டுச் சண்டை சச்சரவுகளும், நாட்டவர் போராண்மைகளும் முற்றுகைகளும், இவைபோல்வன பிறவும் அறிவுள்ள ஒரு குடியானவன் தெரிந்திருப்பன். இசைப்பாட்டுகளுங் கதைப்பாட்டுகளும் அவன் மிகுதியாய் உருவேற்றியிருப்பன். நீண்ட காவியப் பாட்டுகளுஞ் சிலகால் அவன் நினைவிலிருக்கும். ஸ்காத்லாந்திற்குப் பெருமைதந்த பெருமக்களின் செயல்களும் வாழ்நாள் வரலாறுகளுஞ் சிறிதேனுந் தெரிந்திருந்தாலல்லாமல் அவன் தனது கல்வியறிவைப் பெரிதாக எண்ணுவதில்லை. அவன் தனது நினைவிற் பதியவைத்தனபோக, அவன்

தனது அலமாரியில் வைத்திருப்பன யாவை என்பதுஞ் சிறிது கூறுவேம். பொதுவான ஒவ்வொரு குடியானவனுக்குஞ் சிறியதொரு நூல்நிலையம் உரியதாயிருக்கும். வரலாற்றுநூல்கள் தெய்வநூல்கள் என்னும் இவற்றுடன், நல்லிசைப் புலவர்கள் இயற்றிய செய்யுள் நூல்கள் இவனிடம் மிகுதியாய்த் தொகுக்கப்பட்டிருக்கும். மில்டன் (Milton) யங் (Young) என்னும் நல்லிசைப்புலவர்கள் பாடிய பாக்களில் அவர்கட்கு விருப்பம் மிகுதி." என்று அந்நாட்டவர்தங் கல்வியறிவின் ஏற்றத்தைச் சொல்லிக்கொண்டுபோம் கவ்வன் என்னும் மருத்துவ ஆசிரியர், இக் காரணத்தினாலேதான் ஸ்காத்லாந்து, மற்றை நாடுகளைவிட இயல்நூற்புலமையிலுங் கலைநூற்புலமையிலுஞ் சிறந்த ஆசிரியரைப் பெருந்தொகுதியாய்த் தோற்றுவித்தது என்று முடித்துக் கூறுகின்றார்.

இங்ஙனம் ஒரு நாட்டிலுள்ள மக்கள் எல்லாருங் கல்வியில் வேட்கையும் புலமையும் உடையராய்த் திகழ்வார்களானால், அவர் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகளெல்லாரும் அறிவாற்றல்களில் மேன்மேற் பெருகிச் சுடரொளி ஞாயிறுபோற் றுலங்குவார்களென்பதில் ஐயமென்னை? கல்வியறிவும் ஆராய்ச்சியுணர்வும் உயர்ந்த நோக்கமுங் கடவுள் நினைவும் அன்பும் உதவியும் இல்லாத மக்கள் வகுப்பு வெறு விலங்கினத்தோடு ஒப்பதாயிருத்தலின், எல்லா அறிவும் உடைய முதல்வன் உயர்ந்த அறிவுடைய உயிர்களை அவ்வகுப்பின்கட் டோற்றுவியாமல், வேறு விழுமிய உணர்வொழுக்கமுடைய இனங்களிலேதாம் அவர்களைத் தோற்றுவிப்பன். ஒரோவொருகாற் சேற்றிற் செங்கழுநீர் தோன்றினாற்போல, உயர்ந்த உணர்வொழுக்கமில்லாரிடையே உயர்ந்தோர் சிலர் அருகித் தோன்றினும், அவ் வுயர்ந்தோரால் பெறத்தக்க பெரும்பயனை அக் கீழ்மக்கள் பெறாராகலின், அவர் அருமையறிந்து அவர்க்குச் சிறப்புச் செய்து அவர்பாற் பெறும் பயன் எய்துவார் வேறு சிறந்த இனத்தவரே யாவர். நறுமணங்கமழ விரிந்த செறியிதழ்ச் செந்தாமரையின் பக்கத்தே நாளுந் தவளையிருப்பினும் அஃது அதன் இன்சுவை நறவைப் பருகல் அறியாது; தொலைவிலிருந்து வரும் வண்டினமே அதனைப் பருகிப் பெரிதும் இன்புறும். ஆகவே, அறிவிலும் ஆராய்ச்சியிலும் நுண்ணுணர்விலும் அன்பிலும் அன்பொழுக்கத்திலும் ஒரு கூட்டத்தார் எவ்வளவுக்கு மேன்

மேற் பெருகுகின்றனரோ, அவ்வளவுக்கு அவர்பால் அறிவுடையோர் தொகைதொகையாய் வந்து பிறப்பர் என்று அறிதல்வேண்டும். இதனாலன்றோ பார்ப்பனர் வேளாளர் முதலான இனங்களில் அறிவான்மிக்கார் மிகுதியாய்க் காணப்படுகின்றனர். மற்று, அவரல்லாத மற்றை யினங்களிலோ அறிவிற் சிறந்தார் தொகை வரவர அருகிப்போதலுங் கண்கூடாய் அறியப்பட்டதொன்றாகும். வயிற்றுப்பிழைப்புக்காக எந்த இனத்தார் எந்தத் தொழிலைச் செய்ய நேர்ந்தாலுங், தாம் செய்யும் அத் தொழிலாற் பிறவுயிர்க்குத் துன்பம் வராமற் பாதுகாத்து ஒழுகிக்கொண்டே, தமது அறிவைக் கல்வியாராய்ச்சியிலுங் கடவுள் வழிபாட்டிலும் பிறர்க்குதவி யாற்றுவதிலும் புகச்செய்து, தாமுந் தம்மைச் சார்ந்தாருந் தூயராய் வாழ்வதிற் கருத்தூன்றி நிற்றல்வேண்டும். அங்ஙனம் நிற்பார் எவராயினும் அவர்பாற், சிறந்தோர் பிள்ளைகளாய்த் தோன்றி அவரது காலினை நீண்ட வாழ்நாளிலும் நிலையான இன்பத்திலும் வழிவழிப் பெருகச் செய்வர் என்க.

இருபதாம் அத்தியாயம்

மகப்பேறும் மகவளர்ப்பும்

கருக்கொண்ட மகளிர் அக் கருவினை உயிர்க்குங்காற் படுங் கொடுந் துன்பத்தையும், அல்லது கருவுயிர்க்க முடியாமல் இறந்துபடுவதையும் எண்ணிப்பார்க்குங்கால் நெஞ்சம் நடுங்குகின்றது, அது நீராய்உருகுகின்றது. இவ்வாறவர் துன்பப்படுவதும் இறந்துபடுவதும் ஏன்? இவற்றிற்குக் காரணர் யார்? மக்களா அல்லது மக்களைப்படைத்த கடவுளா? நாம் கேளாதிருக்கவும், ஏனை எவராலும் படைத்துக் கொடுக்கமுடியாத மிகச்சிறந்த இவ்வுடம்பையும், இவ்வுடம்பிலிருந்து நாம் நுகருதற்குப் பலவேறு வகையான அரும்பண்டங்களையும், இவையெல்லாமிருந்து நடைபெறுதற்கு மிகவியப்பான இவ்வுலகத்தையும் நமக்குப் படைத்துக்கொடுத்த இறைவன் நம்மிடத்து எவ்வளவு அன்பும் எவ்வளவு அருளும் உடையவனாக இருத்தல் வேண்டும்! இவ்வளவும் அவன் நமக்குத் தந்தது, நாம் அவற்றால் இன்பத்தை யடையவேண்டுமென்னும் நோக்கம்பற்றியே யல்லாமல் துன்பத்தை அடையவேண்டுமென்னுந் தீயஎண்ணம் பற்றியதாய் இருத்தல் ஆகாதே. இறைவன் நமக்காக அமைத்துக் கொடுத்திருக்கும் இவ்வியத்தகும் அமைப்புகளை ஆராயுந்தோறும் ஆராயுந்தோறும், அவன் நம்பால் வைத்திருக்கும் அன்புக்கும் அருளுக்கும் ஓர் எல்லையே இல்லையென்பது நன்கு விளங்காநிற்கும். இறைவன் வகுத்திருக்கும் அமைப்புகளின் அருமையையும் நோக்கத்தையும் ஆராய்ந்து பார்க்கமாட்டாத மடவோரே கடவுண்மேற் குற்றஞ்சொல்வார்கள். மற்றுக், கடவுளமைப்பின் நன்மையையும், அதற்கு மாறாய்நடக்கும் மக்கள் நடையின் தீமையையும் மாறிமாறி ஆழ்ந்தாராய்ந்து பார்க்கவல்ல அறிஞர்க்கோ, மக்கள்படும் அளவிறந்த துன்பமெல்லாம் அவர்கள் தஞ்செயலால் வருவித்துக் கொள்வனவேயா மென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெள்ளிதின் விளங்கும். மக்களினுந் தாழ்ந்த விலங்கினங்களிற் கருக்கொண்ட பெண்விலங்கு அக்கருவை உயிர்க்குங்கால், நம்பெண்மக்களைப்போல் துன்பப்படக் கண்டதுண்டோ? இன்னும், மக்களிலேயே நாகரிகத்திற்

குறைந்தவராகக் கருதப்படும் வில்லியர் வேட்டுவர் பள்ளர் பறையர் முதலான இனங்களில் உள்ள பெண்மக்கள் தாம் கருவுயிர்க்குங்கால் இங்ஙனம் பெருந்துன்பமுறக் கண்டதுண்டோ? அல்லது அவரிற் கருவுயிர்க்கமுடியாமல் இறந்துபட்டவரைத்தாம் கண்டதுண்டோ? இல்லையே. அங்ஙனமிருக்க, நாகரிகமுள்ளவர்களாக எண்ணப்படும் இனத்தவர்களில் மட்டும் பெண்பாலார் கருக்கொண்ட காலந்துவங்கிப் பெருந்துன்பம் உழத்தலும், அக்கருவினை யுயிர்க்குங்கால் அதனை எளிதில் உயிர்க்கமாட்டாமல் ஆங்கில மருத்துவர் கருவிகொண் டெடுக்குமளவு ஆற்றொணாத் துயர்க்கடலிற் படுதலும், அல்லது தாமுந்தங்கருவும் உயிரிழத்தலும் என்னை? என்று கூர்ந்து பார்க்குங்கால், இவர்கள் இங்ஙனந்துன்புறுவது, தாங்கைக்கொண்ட பொல்லாப் பழக்கவழக்கங்களினாலேயே யல்லாமல், இறைவன் அமைத்த அமைப்பினால் அன்றென்று நன்குணர்கின்றோம். அங்ஙனமாயின், நாகரிக இனத்தார் கொண்ட பொருந்தாப் பழக்கவழக்கங்கள் யாவையெனிற் காட்டுதும்.

ஏழையெளியமக்கள் தமக்குள்ள வறுமையினாற் கொழுமையான உணவுகளை அடுத்தடுத்துச் சாப்பிடுவதற்கு இயலாதவர்களாய் இருக்கின்றார்கள். பசி யெடுத்தவேளையிற் கேழ்வரகு சோளக்கூழோ அல்லது சோறோ கீரையோ கிடைத்தமட்டில் உட்கொண்டு, நெற்றித்தண்ணீர் நிலத்தில் விழப் பாடுபடுகின்றார்கள். ஒருநாளுக்கு இரண்டு வேளை நல்லுணவும் இவர்கட்குக் கிடைப்பது அரிது. இவர்களுடம்பின் அகத்தும் புறத்துமுள்ள உறுப்புகள் உழைப்பினால் மிகுந்த வலிவேறப் பெற்றிருப்பதுடன், உடம்பினுள்ளோடுஞ் செந்நீரும் வேண்டியவளவு சூடு உடையதாகி எங்குஞ் செவ்வனே பரவித், தன்கண் அவ்வப்போது வந்துசேரும் அழுக்குகளாகிய நஞ்சையும் வியர்வையாக உடனுக்குடன் வெளிப்படுத்தி விடுகின்றது. உணவினாற் செந்நீரில் ஏறிய வலிவிற் போதுமான பகுதி உழைப்பினாற் குறைபடுதலின், அக்குறைவினை நிறைவுசெய்தற்கு அவர்கட்கு நல்ல பசியெடுக்கின்றது; அங்ஙனம் பசியெடுக்கின்ற வேளையில் எளிதிலே செரிக்கத்தக்க கொழுப்பு மிகுதியாயில்லாத உணவை அவர்கள் உட்கொள்ளுதலால், அவர்கள் உண்ட உணவிற் பெரும்பகுதி

சில் உமிழ்வதற்கோ பக்கத்திற் பணிக்கம்; ஆடை கட்டுவதற்கோ தோழன் தோழிமார்; உடம்பு குளிப்பதற்கும், ஒப்பனை செய்வதற்கும், உணவிடுதற்குங் கைகழுவி விடுதற்கும் ஊழியக்காரர். நெருப்பண்டைபோனால் உடம்பு எரியுமென்று இவர்கள் அடுப்பண்டையுஞ் செல்லார்; வெயிலிற்போனால் உடம்பு கறுத்துப் போகுமென்று இவர்கள் வெயிலிலுஞ் செல்லார்; குளிர்ங்காற்றுப் பட்டால் மூக்கிற் சளிபிடித்துக் கொள்ளுமென்று காற்றிலுஞ் செல்லார். இத்தகையவர் உடம்பில் நல்ல இரத்தம் இருக்குமா? அவ்விரத்தத்திலுள்ள நச்சுநீர் அவ்வப்போது வெளிப்படுதற்கு இடனுண்டா? இவர்கள் உடம்பின் அகத்தும் புறத்தும் உள்ள உறுப்புகள் செவ்வனே அசைந்து வலிவேறுதற்கு வழியுண்டா? ஒன்றுமே இல்லை. இந்த நிலைமையில் இவர்கள் எப்படி யுயிர்பிழைத் திருக்கின்றார்கள் என்பதை நினைந்துபார்த்தால் அஃதொரு பெருவியப்பாகவே யிருக்கின்றது! எப்படியோ உயிர்பிழைத்திருந்தாலும் இவர்களது வாழ்க்கை தொடர்பான துன்பமுடையதாகவே காணப்படுகின்றது. எங்ஙனமென்றால், இவர்கள் அடுத்தடுத் துண்ணுங் கொழுவியவுணவு வயிற்றிலே சென்றால் எளிதிற் செரிப்பதில்லை; முன்னுண்டது அரைவாசிகூடச் செரியாமலிருக்கையிற் பின்னுங் கொழுமையான உணவுகளைத் துறுத்திய வண்ணமாய் இருப்பதால், இங்ஙனஞ் சுமை சுமையாக வந்துசேரும் பண்டங்களை அரைப்பதற்கு நரம்பாலுந் தோலாலும் ஆக்கப்பட்ட தீனிப்பையானது இயலாதாய், அவற்றோடு உரைசிப் புண்ணாகிக் கொடிய வயிற்றுளைவு இரத்தக்கழிச்சல் முதலான துன்பம் மிகுந்த நோய்களை உண்டாக்குகின்றது. இரும்பாற் செய்யப்பட்ட திரிகையிலிட்டு இப்பண்டங்களை அரைத்தாலோ அது சிலநாளில் தேய்ந்துபோகின்றது. மெல்லிய தோற்பையாகிய தீனிக்குடல் இவைகளை அல்லும் பகலும் புண்படாமல் எங்ஙனம் அரைக்கமாட்டும்? நோய்வந்தபிறகாவது இவர்கள் சும்மாயிருக்கின்றார்களா? உடனே மருத்துவரை வருவித்து மருந்துமேல் மருந்துவாங்கி உண்பதுஞ், "சுடச்சுடக் காப்பித்தண்ணீர் அருந்தலாமா? பத்தியமாக வெள்ளாட்டுக்கறி சேர்த்துக் கொள்ளலாமா? கோழிக்குஞ்சு மிளகுசாறு குடிக்கலாமா? முட்டையுஞ் சாராயமுங்கலந்து சாப்பிடலாமா? ஆவி

நன்றாய்ச் செரித்துச் செந்நீரகமாறி உடம்பை நோய் அணுகாமல் வலிவாக்கி நன்கு வளர்க்கின்றது. மேலும், அவர்கள் வெயில் வெளிச்சத்திலுந் தூயகாற்றிலும் வெளியே நடமாடுகின்றவர்களாயிருத்தலால், அவர்களுடம்பு இயற்கைவளர்ச்சி யுடையதாயும் நோய் அணுகப்பெறாததாயும் இருக்கின்றன. இவ்வேழை மக்களில் எவரேனும் பருத்துப் பொதிபோற் குறக்கேவளர்ந்த உடம்பு வாய்ந்தவரா யிருக்கக்கண்டதுண்டோ? இயற்கையில் எவ்வளவினதாய் இருக்க வேண்டுமோ அவ்வளவினதாக வளர்ந்த திண்ணியயாக்கை யுடையராயன்றே அவரெல்லாம் இருக்கக்காண்கின்றேம்.

இனிச், செல்வம் உடைய மக்களைப்பாருங்கள்! இவர்களில் ஊன் உண்பவர்கள் மிகவுங்கொழுப்பான ஆட்டிறைச்சி கோழியிறைச்சி மீனின் தசை முதலியவைகளைத் தேங்காய் முந்திரிப் பருப்பு முதலான பல்வகைக் கொழும் பண்டங்களுடன் சேர்த்து நெய்யிற் பதப்படுத்தி வைத்துக்கொண்டு; நெய் பாலிற் சமைத்த உயர்ந்த சோற்றையும், உழுந்து கடலை கோதுமை முதலியவற்றாற் பாலேட்டிலும் வெண்ணெயிலுஞ் செய்த சர்க்கரைப்பாகு இலட்டுகம் முதலான இனிய தின்பண்டங்களையும், வடை தோசை அப்பம் உப்புமா முதலான சிற்றுண்டிகளையுங், காப்பி தேயிலை கொக்கோநீர் ஆவிநீர் (Aerated Waters) முதலான பருகுநீர்களையுங், கோழிமுட்டை வாத்துமுட்டை முதலியவற்றால் ஆக்கிய அடைகள் குழம்புகளையும், இன்னும் இவைபோல் எம் சொல்லளவில் அடங்காத எத்தனையோ வகையான பண்டங்களையும் நெய் ஒழுக ஒழுக வேளைநேரம் அறியாமல் நாள்முழுதும் இரவிலுட் உட்கொண்ட வண்ணமாய் இருக்கின்றார்கள். இவர்களிற் சாராயம் முதலான மயக்கந்தருஞ் சாறுகளைக் குடிப்பாரும், ஓயாமல் வெற்றிலை பாக்குப்புகையிலை மெல்வாரும் புகைச் சுருட்டுப் பிடிப்பாரும் அபின் தின்பாரும் பலர் உளர். இவ்வளவுந்தின்னும் பூதங்களாகிய இவர்கள் வேலை வெட்டியாவது செய்கின்றார்களோ வென்றால் அதுவும் இல்லை. தமக்குரிய இன்றியமையாத வீட்டுவேலைகளையும் ஏவற்காரரைக் கொண்டே செய்விக்கின்றார்கள். வேலைக்காரரை நெருக்கிப்பிழிந்து வேலைவாங்கும் இவர்கள் தாம் இருந்த இடம்விட்டு அசைவதுமில்லை; எச்

யுப்பு நீரும்(Soda) பாலுங்கலந்து குடிக்கலாமா? சுதும்புக்கருவாடு திருக்கைக்கருவாடு தொட்டுக் கொள்ளலாமா?" என்று இங்ஙனமாக ஓயாமற் பத்தியவுணவு கேட்பதில் மருத்துவர் ஆவியை வாங்குவதும், அவர் எங்கே தமக்குவரும் வருவாய் கெட்டுவிடுமோ என அஞ்சி "அதிற்சிறிது சேர்த்துக் கொள்ளலாம், இதிற் சிறிது சேர்த்துக்கொள்ளலாம்" என்று சொல்ல அதனையே சாக்காகக்கொண்டு அப்பண்டங்களை மேலும்மேலும் அடைப்பதுஞ் செய்கின்றார்கள். நோய்கொண்ட காலத்தும் இவ்வாறுண்ணவே தீனிப்பையானது இவைகளை ஏற்றுக்கொள்ள மாட்டாமற் புறந்தள்ள, அவர்கள் அவைகளைக் கக்கிவிடுகின்றார்கள். இங்ஙனங் கக்கிய பிறகாவது சும்மாவிடுகின்றார்களா? இல்லை இல்லை. "மகளுக்கு இளைப்பு வந்துவிடுமே, மாவுக்கஞ்சியாவது, சோடாபாலாவது, மிளகுநீர்ச்சோறாவது கொடுங்கள்" என்று சொல்லி, அருகிற் கூற்றுவன் தூதர்களைப்போற் சூழ்ந்து கொண்டிருக்கும் அறிவில்லாப் பெண்கள் பின்னும் விடாமல் அவ்வுணவுப்பொருள்களை வலிந்து கொடுக்கின்றார்கள். நோயாளி தன்னால் ஒருசிறிதும் உள்கொள்ளல் முடியாதென்று சோர்ந்து படுக்கும்வரையில் அருகிலிருப்பவரும் விடுவதில்லை. மருத்துவரும் மருந்துமேல் மருந்து கொடுப்பதை நிறுத்துவதில்லை. இந்த அறிவில்லா இரங்கத்தக்க நிலையிற் செல்வரில்லத்துப் பெண்பாலார் ஆண்பாலாரில் எத்தனையோபேர் ஆண்டுமுதிரா இளம்பருவத்திலேயே இறந்துபடுகின்றனர். தப்பித்தவறிப் பிழைப்பவர்கள் என்போர், உணவும் மருந்தும் உட்கொள்ளமுடியா நிலைமையிற் சிலநாட் சோர்ந்து கிடக்க, அப்போது உள்ளுள்ள தீனிப்பை முதலிய கருவிகள் சுமைநீங்கித் தத்தம்நிலைக்குவந்து, தத்தந் தொழில்களைச் செவ்வனே செய்யத்துவங்க, அந்நேரத்திற் பால்நீர்க்குமேற் பிறிது ஏதும் உட்கொள்ளவியலாத பதத்திலிருந்து நோய்நீங்கிப் பிழைத்தெழுபவர்களே யாவர். இவ்வாறு துன்பப்பட்டுப் பிழைத்தெழுந்தபிறகாவது இவர்கட்கு நல்லறிவு வருகின்றதாவென்றால், இல்லை, இல்லை. தாம் நோய்வாய்ப்பட்டது, அடுத்தடுத்துக் கொழுமையான உணவுகளை உண்டதனாலேதான் என்பதைச் சிறிதும் உணராமல், "அது மாரிகுற்றங் காளிகுற்றம் மலையான் குற்றம் பூவாடைக்காரி குற்றம்" எனப் பெரிதும் பிழைபட

நினைந்து, பாரிக்குக் காப்புக்கட்டுகிறவர்களும் வேங்கடமலையானுக்குக் காணிக்கை செலுத்துகிறவர்களும், முனீசுரனுக்கு ஆடு கோழி வெட்டிப் பூசைபோடுகிறவர்களுமாய்ப், பின்னும் பின்னுந் தமது பழையவழக்கப்படியே வாய் கொண்டமட்டும் வயிறு பிதுங்கும்மட்டுந் தின்று தின்று, தாம் நோய்க்கு இரையாகி மடிவதல்லாமல், தம்வயிற்றிற் பிறந்த பிள்ளைகளையும் நோய்க்கு ஆளாக்கி விரைந்து மடியச்செய்கின்றார்கள்! தம்முடம்பையுந் தம்வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகளையும் நோயணுகாமற் பாதுகாக்கும் வகையறியாத விலங்குகட்கு ஏராளமான செல்வமிருந்து பயன் என்ன! அச்செல்வமானது அவர்களை மேலுமேலும் நோய்வாய்ப்படுத்துக் கூற்றுவனுலகுக்கு வழிகாட்டி விடுப்பதாயிருக்கின்றதேயன்றி வேறில்லையே!

இனிச், செல்வர்வீட்டு மகளிரைப் பார்த்து, நடுத்தர நிலையிலுள்ள மாதர்களுங் கொழுமையான உணவுகளையுங், காப்பி தேயிலைமுதலியன சேர்ந்த நச்சு நீரையும் உட்கொள்வதுடன், தமது வீட்டுவேலை ஒவ்வொன்றுக்கும் வேலைக்காரரை அமர்த்தச் சொல்லித் தம் ஆடவரையுந் துன்புறுத்துகின்றார்கள். இயற்கைக்குமாறான இவ்வொழுகலாற்றால் தாம் பெரிதுந் துன்புறுவதொடு தம்வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகளையுந் துன்புறச்செய்து, விரைவில் வறிவயர்களாகிக், கூலிவேலை செய்வதற்கும் இயலாதவர்களாய்க் கடைசியில் ஐயம் ஏற்றுண்டு வாழ்நாட் கடத்துகின்றார்கள்.

ஆகவே, செல்வராயிருப்பினும், ஏழைகளாயிருப்பினும், நடுத்தரவாழ்க்கையி லிருப்பினும் இயற்கைக்கு மாறுபடாமல் நடந்து வருபவர்கட்குப் பிள்ளைப்பேற்றினால் ஏதொரு துன்பமும் விளையாதென் றறிந்துகொள்க. கருக்கொண்ட மகளிர் தமது வீட்டுவேலையைத் தாமே மனம்வைத்து மகிழ்ச்சியோடு செய்தல் வேண்டும். மிகவுஞ் சுமையான தண்ணீர்க்குடந்தூக்குதல் முதற் சிலகடுமையான வேலைகளைமட்டும் பிறரையாவது ஏவற்காரரையாவது கொண்டு செய்வித்துக்கொள்ளல் வேண்டும். ஏனைச் சமயற்றொழில், வீடுகூட்டிமெழுகித் துப்புரவு செய்யுந் தொழில் முதலியனவெல்லாம் அவர்கள் தாமே செய்தலே நன்று. ஆனால், இத்தொழில்களைச் செய்யுங்கால் இளைப்புக் களைப்பு வரும் அவ்வளவுக்கு அவற்றைச் செய்தலாகாது; இளைப்புக்கு

இடஞ்செய்யும் வேலைகளை இடையிடையே பிறருதவிகொண்டு செய்தல் வேண்டும். இவ்வாறு வீட்டுவேலைகளை அளவறிந்து செய்வதனாலும், அவற்றை நாளுக்குநாட் பெருக்காமல் உயிர்வாழ்க்கைக்கு வேண்டியவளவிற் கொணர்ந்து சுருக்கிச்செய்தலாலும் உடம்பினுள்ளும் புறம்புமுள்ள உறுப்புகளெல்லாம் அசைய வேண்டும் அளவு அசைந்து வலிவேறித் தாயின் உடம்பையும் அவளுடம்பகத்துள்ள கருவையும் நோயணுகாமற் செவ்வையாக வளரவைக்கும்; வீட்டுச் செலவைச் சிக்கனமாக்கிக் குறைத்துச் செய்வதனால் வறுமையின்றி வளமாய் வாழலாம். சிலர் இல்லங்களிலே எந்நேரமும் உண்டியுஞ் சிற்றுண்டியுஞ் செய்தவண்ணமாய் இருக்கின்றார்கள். இதனால் வீட்டுவேலைகள் அளவின்றிப் பெருகி, அவற்றைச் செய்வார்க்கு அயர்வினை வருவிப்பதல்லாமலும், பொருட்செலவும் மிகுதியாகி வறுமைக்கு வழிகாட்டும்; மேலே காட்டியபடி, எந்நேரமும் உண்டியுஞ் சிற்றுண்டியும் அருந்துதலால் அவ்வீட்டிலுள்ளார் அனைவரும் பலவேறுநோய் கொண்டவராயுந் துன்புறுகின்றார்கள். ஆதலால், உணவுகள் சிற்றுண்டிகளை மிகுதிப்படுத்தலாகாது.

அறிவுமுயற்சி யுடையார்கள் காலையில் தனிப்பாலைக் காய்ச்சியேனும், அல்லது அதனொடு சிறிது இஞ்சிச் சாறுஞ் சருக்கரையுங் கலந்தேனுஞ் செரிக்கும் அளவறிந்து உட்கொள்ளுதல் போதும். அறிவு முயற்சியோடு உடம்புழைப்பும் உள்ளவர்கள், காலையிற் சிறிது இட்டிலி அல்லது உப்புமா அல்லது தோசை அல்லது வடை அல்லது அப்பம் உட்கொண்டு பாலும் பருகலாம். அறிவுமுயற்சி யில்லாமல் உடம்புழைப்புமட்டும் உள்ளவர்கள் காலையிற் சோறுந்தயிருஞ் சிறிது துவையலுங் கூட்டி உணவாகக் கொள்ளலாம். ஆனால், உடம்புழைப்பில்லாமற் சும்மா இருப்பவர்கள் காலையிற் சிறிது பருகுநீரையன்றி வேறெதனையும் உட்கொள்ளாமலிருந்தாற்றான் நோயின்றி வாழலாம், நோயில்லாத மக்களைப்பெறலாம்.

பகலில் உச்சிப்போதிலோ நன்குசமைத்த சோறுஞ் சுவையான ஒரு குழம்பும் ஒரு மிளகுநீரும் ஒருகறியுந் துவட்டின கீரையும் மோரும் உட்கொண்டாற் போதும். இவ்வளவுக்கு மேற் கொழுமையான பலவகைக் குழம்புகளையும் பலவகைக்

கறிகளையும் பாயசம் வடை இலட்டுகம் பாலேடு முதலியவைகளையும் நாடோறுஞ் செய்வித்து விலாப்புடைக்கத் தின்று வருவதும், பிற்பகலிலும் அங்ஙனமே சிற்றுண்டிகள் பல செய்வித்து அருந்துதலும் பெருந்தீங்கு பயப்பனவாகும். ஏன்றோ ஒரு சிறப்புநாளில் இத்தகைய கொழுவிய உணவுகளை உண்பது குற்றமாகாது; என்றாலும், அன்றைக்குங்கூடக் காலையில் ஏதும் அருந்தாதிருந்து, உச்சிப்போதிலும் இவற்றை அயிலுங்கால் முக்கால் வயிற்றுக்குமேல் அயின்றுவிடுதலாகாது. ஒருகால் ஒருபார்ப்பனர் கொழுமைமிக்க பல்வகை இன்சுவை உணவுகளை வயிறு கொள்ளும் அளவுக்குமேல் வாய்கொண்டமட்டும் விழுங்கி, அதனால் மூச்சுவிடமாட்டாமற் கீழேகிடந்து புரண்டுகொண்டிருந்தனராம். அதனைக்கண்டு அவர்மேல் இரக்கமுற்ற ஒரு மருத்துவர் "ஐயரே, யான் ஓர் உழுந்தளவு மருந்து கொடுக்கிறேன்; அதனை உண்பீரானால் மிகுதியானஉணவு வெளிப்பட்டு நலம் உண்டாகும்" என்றனராம். அதனைக்கேட்ட அவ்வையர் "போங்காணும் போம், என்வயிற்றில் அவ்வுழுந்தளவு மருந்து கொள்ளும் இடமிருந்தாற், பின்னுஞ் சிறிது உணவுகொண்டு இருப்பேனே!" என்று மறுமொழி கூறினராம். இவ்வாறு ஒரு வரையறையின்றித் தின்பவர்கள் நோயை விலைகொடுத்து வாங்குபவர்களாயிருத்தலால், அத்தன்மையோர்க்கு எம்போல்வார் எத்துணையறிவு கூறினாலும், அஃது அவர் செவியில் ஏறாது. ஆகலால், அவரையொழித்து ஒழிந்த ஏனையோரே எம்சொல்வழியில் ஒழுகி நோயின்றி இனிது வாழற்பாலார் என்க.

இனி, இராப்பொழுதிற் கொள்ளும் உணவிற் கருக்கொண்ட மகளிர் இன்னும் விழிப்பாக இருத்தல் வேண்டும். பகலவன் இல்லாத இராக்காலத்தில் மக்களின் உடம்பு வலிகுறைந்ததாயிருக்கின்றது; அதனால், வயிற்றிலுள்ள தீனிப்பையுஞ் செயல் குறைந்ததாய் மெல்ல நடக்கின்றது. அந்நேரத்தில் எளிதாகச் செரியாத உணவுப்பண்டங்களை உட்கொண்டால் நோய் உண்டாகும்; ஆகலால், அப்போது முக்கால் வயிற்றுக்குமேல் அருந்துவது கூடாது. அன்றி மிகுத்துண்டாலோ மூச்சுத் திணறி வயிற்றுவலிகொண்டு தாயானவள் வருந்துவதுடன், அவளது வயிற்றிலுள்ள கருவும் மிகுந்த உணவேறிய தீனிப்பையினால் நெருக்குண்டு வருந்தும், அல்லது மூச்சுவிட முடியாமற் சாவினுஞ் சாம். உட்கொள்ளும் உணவும் மிகுந்த குளிர்ச்சியும் மிகுந்த சூடும் மிகுந்த காரமும் உண்டுபண்ணுதனவாய் இருத்தல்வேண்டும். அழகிய வெண்ணிறம் அல்லது பொன்னிறம் வாய்ந்த பிள்ளைகளைப் பெறவேண்டுந் தாய்மார்கள் இரவிற் பாற்சோறு மிசைதல் வேண்டுமென்று 'பிருகதாரணியகோபநிடதம்' நுவலுதலாலும், அஃது இக்காலத்திற் கருவாராய்ச்சிக்காரர் கூறும் உரையோடு ஒத்து நிற்றலாலுஞ் சூல்கொண்ட மாதர் இரவிற் பாற்சோறு அயின்று அழகிய மக்களைப்பெற்று இன்புறுவார்களாக.

இன்னுந், தாய்மார் தாங்கொண்ட கருவை உயிர்க்குங்காற் சிறிதுந் துன்பமின்றி உயிர்த்தற்கு எளியதொரு வழியிருக்கின்றது. அதாவது: வயிற்றில் வளருங் கருவின் உடம்பிலுள்ள எலும்புகள் கற்போல் வல்லென்று கெட்டியாகாமல் மெழுகு போல் மென்பதமாக வளருதற்குத்தக்க உணவுகளையே தெரிந்து உட்கொள்ளல் வேண்டும். வெள்ளியமா, சீமைஅவரை, பட்டாணி, வாற்கோதுமை, வெண்ணெய், பாற்கட்டி முதலிய பண்டங்கள் எலும்பைக் கெட்டிப்படுத்துவன வென்று ஆங்கிலமருத்துநூலாசிரியர்கள் ஆராய்ந்து உரைத்தலாற், கருக்கொண்ட மகளிர் அரைத்தமாவிற் சமைத்த சிற்றுண்டிகளையுஞ், சீமைஅவரை முதலியவற்றிற் செய்த கூட்டுகளையும், வாற்கோதுமைக் கஞ்சியையும், வெண்ணெய் கட்டிப்பால் முதலானவைகளையுந் தாம் கருவுயிர்க்கும் அளவும் உண்ணலாகாது. அவற்றில் அவா மிகுதியாயிருந்தால் என்றைக்கோ ஒருகாற் சிறிது அயிலலாம். அடுத்தடுத்து அவற்றை உண்ணலும் ஆகாது, கருவுயிர்த்தற்கு ஒருதிங்கள் வரையிலும் அவற்றைக் கண்ணெடுத்துப் பார்த்தலும் ஆகாது. இவ்வாறு செய்தலைவிடுத்து அப்பண்டங்களை அடுத்தடுத்து மிகுத்துண்பார்களாயின், அவற்றால் வயிற்றிலுள்ள மகவின் எலும்புகள் இறுகிக் கெட்டியாகுமாதலால், அம்மகவினைப் பெறமாட்டாமல் தாயும் பிள்ளையும் உயிர்துறப்பர்; அல்லது ஆங்கில மருத்துவர் உதவியாற் கருவிகொண்டு மகவு எடுக்கப்பட்டு உயிர்பிழைப்பினும், ஈருயிரினுடம்பும் நலிவுகொண்டு வருந்தும் நிலையிலேயேயிருக்குமென் றறிந்து கொள்க.

இன்னுஞ், சூல்கொண்டமாதர் விடாய் எடுத்த காலங்களிலெல்லாந் தூயதண்ணீர் அல்லது வெந்நீரையே பருகல்வேண்டுமல்லாமல், உப்புக்காரநீர் (Soda Water) காப்பி தேயிலை கொக்கோநீர் முதலியவைகளைப் பருகலாகாது. இனிய பழங்களையே அவர்கள் மிகுதியாக அருந்துவார்களாயின் விடாயும் பசியும் அவர்களைவருத்தா; உடம்பில் தூய நல்லஇரத்தம் ஓடித் தாயின் உடம்பையுங் கருவின் உடம்பையும் நோயின்றி நன்கு வளரச் செய்வதுடன், கருவுயிர்க்குங்கால் தாய்க்குச் சிறிதுந் துன்பம் வராமலும் பாதுகாக்கும்.

இம்முறைகளின்படி வழுவாது நடந்துகொண்டே, உடம்பின் புறத்தும் அகத்தும் அழுக்குச்சேராமல் நன்குகழுவி அடிக்கடி துப்புரவுசெய்தல் வேண்டும். பெண்மக்களிற் பெரும்பாலார் தமதுடம்பின் புறத்தை அடுத்தடுத்துக் கழுவுதலிற் கருத்துவைத்திருத்தல் போலத், தமதுடம்பின் அகத்தே சாக்கடையாய் உள்ள மலநீர்க்குடல்களைக் கழுவித் துப்புரவு செய்வதில்லை. இதனால் அவர்களும் அவர்கள் வயிற்றிற்பிறக்கும் பிள்ளைகளும் அவர்களை மருவுங் கணவர்களும் பலவகையான நோய்களாற் பற்றப்பட்டுப் பெரிதுந் துன்புறுகின்றார்கள். பெண்மக்கள் அறிவுடையவர்களாய்த் திருந்தித் தம்மைத் துப்புரவு செய்யும் முறைகளைக் கைப்பற்றாதவரையில், அவர்களைச் சார்ந்தே உயிர்வாழ வேண்டிய நிலையிலுள்ள அவர்களின் மகாருங் கணவரும் இனிதுஉயிர்வாழ்தற்கு இடமேயில்லை. இவ்வுண்மையை அவர்களே உணராவிடினும், அவர்களைச் சேர்ந்தோராவது அதனை அவர்கட்கு நன்கெடுத்துக்காட்டி, நாடோறுமாவது ஒருகிழமைக்கு இருமுறை மும்முறையாவது நீரேற்றி (எநிமா) கொண்டு அவர்கள் தமது மலநீர்க் குடல்களைத் துப்புரவு செய்யுமாறு வற்புறுத்தல் வேண்டும். இதனோடு, உடம்புமுழுதும் படுமாறு பிற்பகலில் வெயிற்காய்தல் வேண்டும். இவ்வாறு நடந்துவரும் மாதர்கள் தாங்கொண்ட கருவை உயிர்க்குங்காற் சிறிதும் வருத்தமின்றி உயிர்ப்பர். குழந்தையுந்தாயும் மிகச் செவ்விய நிலையில்இருப்பர்.

இனிப், பிறந்த குழந்தைக்கு மலநீர்கள் செவ்வையாக வெளிப்படாவிட்டால், நீரேற்றியில் ஆழாக்கு வெதுவெதுப்பான சவர்க்கார நீரைவிட்டுக், குழந்தையின் மலக்குடரில் அதனை

ஏற்றினால், உடனே அழுக்குமுழுதும் வெளியாகிக் குழந்தை நலமாயிருக்கும். இவ்வாறு செய்வதிற் சிலர் அச்சமுறுகின்றார்கள்; அஃது அறியாமையேயாகும். எமது இல்லத்தில் எம் கடைசிமகள் பிறந்தபோது, அவட்குப் பிறந்தவுடனே மலநீரடைப்புகள் இருந்தன;. மருந்திலும் அவை வெளிவரவில்லை; உடனே யாம் பிறந்தமறுநாளே ஆழாக்குச் சவர்க்கார வெந்நீர்கொண்டு நீரேற்றி வைத்தேம்; வைத்தபின் அழுக்குமுற்றுங் கழிந்து அப்பிள்ளை நலமுறலாயிற்று. பிறந்த குழந்தைக்கு இவ்வாறு செய்தலேயன்றி, அதனைப் பெற்ற தாய்க்கும் நீரேற்றி கொண்டு மலநீர்க்குடலையும், பெண்குறி வழியாகக் கருப்பையையுங் கழுவிவிடுதல் வேண்டும். மகவீன்ற பெண்பாலார் பலர் சிலர்க்குச் செந்நீர் வெளிப்படவேண்டிய வளவுக்கு வெளிப்படாமற் கட்டுப்பட்டுநின்று பெருநோயினையும் உயிர்க் கிறுதியினையும் விளைப்பதுண்டு. எமதில்லத்திலேயே எம் முதன்மகள் தலைப்பிள்ளையீன்ற மறுநாளில் வயிற்றகத்தே செந்நீர்க்கட்டு உடையளாகி அன்றிரவில் இரண்டொரு மணிநேரம் பட்ட துன்பம் அளவிடற் பாலதன்று. செய்வ தின்னதென்று தெரியாமல் மருத்துவிச்சியும் பிறருந் திகைத்து வருந்துவதைக்கண்டு, யாம் உடனே நீரேற்றியில் இளஞ்சூடான சவர்க்கார நீரை நிரப்பி, எம் அன்னையைக் கொண்டு அவளது கருப்பைக்கு அந்நீரைச் செலுத்துவித்தேம் செலுத்திய இரண்டொரு நிமிடத்திலெல்லாம், அவளது வயிற்றினுள்ளே கட்டுப்பட்டுநின்ற செந்நீர் அவ்வளவும் வெளியாகி, அருகிருந்தாரெல்லாரும் வியக்கும்படி அவட்கு உடனே முழுநலன் உண்டாயிற்று.

தாயின் முலைப்பாலிலேயே குழந்தையின் மலநீர்க்குடரைத் துப்புரவு செய்தற்கு ஏற்ற முதற்பொருள்கள் கலந்திருத்தலால், தாய்ப்பால் கெடாமலிருக்கத்தக்க உணவுகளையே தாயானவள் அருந்திவருவது நன்று. இதனாற் குழந்தையின் உடம்பொடு தாயின் உடம்பும் நலமாய்வளரும். பச்சரிசியைவிடப் புழுங்கலரிசியிற் சமைத்தவுணவே சிறந்தது. அரைக்கீரை பொன்னாங்காணிக்கீரை சிறுகீரை வகைகளை மாறிமாறிச்சமைத்து உட்கொண்டால், தாய்க்கு மலச்சிக்கல் உண்டாகாது. தித்திப்பான அத்திப்பழங் குடகுநாரத்தம்பழம் செவ்வாழைப்பழஞ் சீமை இலந்தைப்

பழம் முதலியவற்றை உணவுக்குமேல் உட்கொண்டு வந்தால் இரத்தந் தூயதாகும். குழந்தை பால் மறக்கும்மட்டும் மாம்பழம் பலாப்பழம் நாவற்பழம் வாழைப்பழம் முதலியவைகளை அறவே விலக்கிவிடல் வேண்டும். பறங்கிக்காய் பீர்க்கங்காய் பூசனிக்காய் புடலங்காய் முள்ளங்கி முதலான மிகக்குளிர்ந்த பண்டங்களுஞ் சேர்க்கலாகாது. துவரம்பருப்பிற் செய்த மிளகுநீர்மட்டும் ஆகுமேதவிரத், துவரம்பருப்பின் புழுக்கலாவது குழம்பாவது ஆகா. இளமுருங்கைக்காய் வெண்டைக்காய் கத்தரிக்காய் அவரைக்காய் முதலியன சேர்த்துத் தேங்காய்ப்பால் விட்டுச் செய்த பொரித்த குழம்பே மகவீன்றதாய்க்கு மிக இசைந்ததாகும். இஞ்சி, சுக்கு, கொத்தமல்லி, ஏலக்காய் என்னும் இவற்றில் ஏதேனும் ஒன்றை உடம்பின் நிலையறிந்து சேர்த்துக் காய்ச்சிய ஆவின் பாலும், அது வாயாதேல் தூயதண்ணீர் அல்லது வெந்நீரும் பருகுதற்கு நல்லனவாகும். உடம்பிற் குளிர்ச்சி மிகுந்திருக்குங்காற் சூடானபண்டங்களையுஞ் சூடுமிகுந்திருக்குங்காற் குளிர்ச்சியான பண்டங்களையும் பகுத்தறிந்து சேர்ப்பவர்களுக்கு நோய் சிறிதும் அணுகாது.

மகவீன்று இரண்டு மூன்று திங்கள் சென்றபின், தாய் தன் உடம்பை வலுப்படுத்துதற்கேற்ற பண்டங்களைச் செமிக்கும் அளவறிந்து சேர்த்துவந்தாற், பிள்ளையின் உடம்பும் வலிவேறி அழகாய்வளரும். கசப்பில்லாத வாதுமைப்பருப்பை அரைத்து ஆவின் பாலில் இட்டுக் காய்ச்சிச் சீனிக்கற்கண்டின் பொடியுங் கலந்து காலையிற்பருகலாம். உழுத்தம்பருப்பு எலும்பையும் எலும்பின் மூளையையும் உரமாக்கி மேனியையும் அழகுபெற வளரச் செய்யுஞ் சிறந்ததன்மை யுடையதாகையால், அதிற்செய்த வடை அப்பளம் முதலானவைகளை இடையிடையே உட்கொள்ளலாம். உழுத்தம்பருப்பிற் செய்த சிற்றுண்டிகளை ஓர் ஒழுங்கான முறையில் உட்கொண்டு வருபவர்களுக்கு, எலும்புருக்கி ஈளை நீரிழிவு முதலியன வரா. ஆனாலும், இவற்றைத் தொடர்பாக உட்கொள்ளுதலும் ஆகாது, உடம்பு சிறிதுநலிவாயிருந்தாலும் இவற்றை அருந்தலாகாது. உடம்பு நல்ல நிலைமையில் இருக்கும் நேரங்களில் மட்டுமே இத்தகைய கொழுவியபண்டங்களை அளவாக அயிலல் வேண்டும்.

இனிக், கருவுயிர்த்த மாதர் இருக்கும் அறைகளிற் பெண்பாலார் மிகுதியாக வருதற்கு இடங்கொடுத்தல் ஆகாது. ஏனென்றால், வருபவர்களிற் பெரும்பாலார் வீணான பலவகைச் செய்திகளைப் பேசுபவர்களாய் இருத்தலாலும், அச் செய்திகளிற் பல கவலையுந் துயரமுந் தருவனவாய் இருத்தலாலும் அவைகளைக் கேட்டலாற் கருவுயிர்த்த மாதர்க்கு மன அதிர்ச்சி யுண்டாகிப் பல துன்பங்களை வருவிக்கும். அதனால் அவர் உடம்பு நலங்கெடுவதொடு, நலங்கெட்ட உடம்பிலிருந் துண்டாகும் பாலைப் பருகும் மகவும் உடம்புநலங் கெடும். இன்னுங் கருவுயிர்த்த அறையில், அழுக்குங் குப்பை கூளங்களும் முடைநாற்றம் வீசுந் துணிகளும் இருத்தலாகாது. நல்லகாற்றும் வெளிச்சமும் அதன்கண் உலவுதற்கு வழிசெய்தல்வேண்டும். கருவுயிர்த்த மாதர்க்கு ஆடைகளை அடிக்கடி மாற்றிவரல் முதன்மையானது. குழந்தையை மெதுவான துணிகளின்மேற் படுக்க வைத்தலுடன், அத் துணிகள் அதன் மலநீர்களால் நனைவதனை நினைப்பாக அடுத்தடுத்துப் பார்த்து, அவற்றையும் மாற்றிவருதல் இன்றியமையாதது.

மகவு பசித்து அழும் நேரங்களில் அல்லாமல் மற்ற நேரங்களில் தாயானவள் பால்கொடுத்த லாகாது. சிற்சிலகால் வயிற்றுவலி, தலைவலி, காய்ச்சல், மலநீர் அடைப்பு முதலிய காரணங்களாலுங் குழந்தை அழும். அது பசித்தழுகின்றதா? நோயினால் அழுகின்றதா? என்பதனை ஆராய்ந்துபார்த்து, நோயால் அழுவதாயிருந்தாற் பால்கொடாது, அந் நோய் நீங்குதற்கான ஒழுங்குகளைச் செய்தல் இன்றியமையாதது. இவ்வாறன்றி, அஃது அழும் நேரமெல்லாம் பால்கொடுத்து வழக்கம் பண்ணுவது தாய்க்கும் பிள்ளைக்குந் துன்பத்தையும் நோயையுந் தரும்.

இனித், தாய்க்கும் பிள்ளைக்குந் தலைமுழுக்குச் செய்வித்தலோ, உடம்பைமட்டுங் கழுவுவித்தலோ, இருவருடம்பின் நிலையையுங் காலத்தின் இயற்கையையும் அறிந்து செய்தல்வேண்டும். இருவர்க்கும் உடம்பு செவ்வையாயிருந்தால் வெயிற்காலத்தில் தண்ணீரிலுங், குளிர்காலத்தில் வெந்நீரிலும் அவர்கள் முழுகலாம். குளிர்ந்த நீரைவிட வெதுவெதுப்பான நீரைப் பயன்படுத்தல் எக்காலத்திற்கும் இசைந்ததாகும்.

இனி, மகவீன்ற தாய்க்குப் பால் இருந்தால், அவளே பத்துத்திங்கள் வரையில் தன்மகவுக்குப் பால் கொடுத்துவரல்வேண்டும். தாயின் மனநிலைக்கும் அவளிடமிருந் துண்டாகும் முலைப்பாலுக்கும் நெருங்கிய ஒற்றுமை யிருத்தலால், தாம் வருந்திப் பெற்ற குழந்தை நல்ல நிலைமையில் இருக்கவேண்டும் என்னும் விருப்பம் உடைய தாய்மார் ஒவ்வொருவரும், வருத்தங் கவலை சினந் துயரம் முதலிய துன்பங்கள் தம் உள்ளத்தைத் தாக்காதபடி கருத்தாய் இருத்தல்வேண்டும். அமைதியும் மகிழ்ச்சியும் உயர்ந்த எண்ணங்களும் உயர்ந்த நினைவுகளுந் தோன்றப்பெற்ற உள்ளத்தளாயே யிருக்கப் பழகிக்கொண்ட தாயின் முலைப்பாலைக் குடிக்கும் மகவு தவறாமற் சிறந்த உடல்நிலை மனநிலை வாய்க்கப்பெறும் என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

தாய்க்குப் பால் இல்லாவிட்டால், வேறொருத்தியைச் சம்பளத்திற்கு அமர்த்திப் பிள்ளைக்குப் பால் கொடுப்பிப்பது செல்வர் இல்லங்களில் வழக்கமாக இருக்கின்றது. ஆனால், இதைவிடப் பிள்ளைக்குத் தீங்கு பயக்கக்கூடிய பொல்லாத வழக்கம் வேறில்லை. சம்பளத்திற்கு அமர்த்தப்படும் ஏழை எளிய பெண்களின் மனநிலை உடல்நிலைகள் விரும்பத்தக்கனவாய் இரா. அவர்கள் நிலையினை ஆராய்ந்து பார்க்கத் தக்கவர்கட்கே அவ்வுண்மை விளங்கும்; அவ்வியல்புகளை ஈண்டெடுத்தெழுதுவது நன்றாகாது. தாய்ப்பால் இல்லாவிட்டால், ஆவின் பாலில் அளவுக்களவு வெந்நீர்கலந்து சிறிது சர்க்கரையுஞ் சேர்த்து அதனை மகவுக்கு ஊட்டுதலே மிகச் சிறந்ததாகும். ஆவின்பாலை எடுபடா வற்றக்காய்ச்சுதல் ஆகாது. குழந்தை வளரவளரப் பாலிற்கலக்கும் வெந்நீரின் அளவைக் குறைத்துக்கொண்டுவந்து, பத்துத்திங்கள் ஆனபிறகு நீர் கலவாமலே பால் பருகுவிக்கலாம். இக்காலங்களில் மகவுக்கு மலநீரடைப்புகள் உண்டாகாதபடி பார்த்துவரல் வேண்டும். விளக்கெண்ணெயைச் சிறிது சூடாக்கி அதனைக் காலைப்பொழுதில் இடையிடையே கொடுத்து வந்தாற், பிள்ளையின் மலநீர்க்குடல்கள் துப்புரவாயிருக்கும். ஆவின்பாலைத் தவிரப், பெட்டிப் பால் முதலியன கொடுத்தல் ஆகாது. பெட்டிப்பால் கொடுத்து வந்த பிள்ளைகளுக்கு மலச்சிக்கலுஞ் சீழ்க்கட்டிகளும் உண்டாகித் துன்புறுத்துதலை யாம் நேரே பலகாற் கண்டிருக்கின்றேம்.

இனிக், குழந்தைகட்குப் பல்முளைக்கத் துவங்கினவுடன், வெறும் பால்மட்டும் அவற்றின் உடம்பு வளர்ச்சிக்குப் போதாமையால், வலுவான வுணவுகளைச் சிறிது சிறிதாகக் கொடுக்கத் துவங்கல் வேண்டும். கடையில் விற்கும் அம்புக்கிழங்கு மா (arrowroot flour) முதலியவற்றால் ஆகிய கஞ்சி குழந்தையின் உடம்பு வளர்ச்சிக்குப் பற்றாதென்றுங், கோதுமை நொய்யும் ஆவின்பாலுஞ் சேர்ந்த கஞ்சியுஞ் சிலபழவகைகளுங் கொடுத்தலே அதன் வளர்ச்சிக்கு இசைந்ததாகுமென்றும் ஆங்கில மருத்துவ ஆசிரியர்கள் ஆராய்ந்துரைத்தலால், அவர் கூறுகிறபடி உணவூட்டுதலே செயற்பாலதாகும் என்க.

ஒன்றரையாண்டு வளர்ந்த குழந்தைக்கு உணவாகக் கொடுக்கற்பாலது யாதெனின்; எவ்வெவ்வூரவர் எவ்வெவ்வுணவை உட்கொண்டு பழகி வளர்ந்து வந்திருக்கின்றனரோ, அவ்வுணவையே அவ்வக் குழந்தைகட்குக் கொடுத்து வளர்த்து வருதல் நன்று. இத்தமிழ் நாட்டில் உள்ளாரிற் பெரும்பாலார் அரிசியிற் சமைத்த வுணவையே உட்கொள்கின்றனர்; தமிழருள்ளும் ஏழை யெளியவர்களா யிருப்பவர்கள் கேழ்வரகிற் சமைத்த கூழையே மிகுதியாகப் பயன்படுத்துகின்றனர். கொங்குநாட்டில் உள்ளவர்கள் சோளங் கம்பு முதலியவற்றிற் சமைத்தவைகளை அருந்துகின்றனர். மலையாளத்தில் உள்ளவர்கள் பச்சரிசிநொய்யில் தேங்காய்ப் பால் விட்டுக்காய்ச்சிய கஞ்சியைக் குடிக்கின்றனர். இங்ஙனமே இன்னும் ஊர்ஊர்கடோறும் பயன்படுத்தப்படும் உணவுகள் பலவேறு வகையினவாய் இருக்கின்றன. ஆகவே, எவரெவர் எவ்வெவ்வகை யுணவிற்பழகி வளர்ந்திருக்கின்றனரோ, அவரவர் அவ்வவ்வகை யுணவினையே தமது இரத்தத்தில் ஊறி வளர்ந்த மகவுக்குங் கொடுக்கலாம். இதுகொண்டு, தாம் வழக்கமாய்க் கையாண்டுவந்த உணவை மாற்றப்படாதென்பது கருத்தன்று. காலவசதி இடவசதி பொருள்வசதிகட்கு ஏற்ப உணவை மாற்றுவது குற்றமன்று. ஆனால், அங்ஙனம் மாற்றவேண்டிய முதன்மையையும், மாற்றினால் வரும் நலத்தையும் நன்கறிந்து அவ்வாறு செய்தலே நன்றாகும். அங்ஙனம் வழக்கமாய்க் கொள்ளும் உணவை விலக்கி வேறு புதியவுணவை யுட்கொள்ளுங்கால், வயிற்றிற் செரியாக்குணமுங் குடலில் மலச்சிக்கலுஞ் சிலர்க்குச் சிலகாற்

யிடுதலாலுந் தம்முடம்பைப் பழுதாக்கிக்கொள்வதல்லாமலுஞ், சில நேரங்களில் உயிரையும் போக்கிக்கொள்கின்றார்கள். ஆதலாற், பெற்றோர்கள் அக் காலங்களில் தம் பிள்ளைகளின் வெளி நடக்கைகளைக் கேட்டறிந்து, அவர்களைச் சீர்திருத்தி நல்வழியில் நடக்கும்படி செய்தல் வேண்டும். பள்ளிக்கூடத்திலேயே சிறுவர்களுக்கு நேசர்களும் பகைவர்களும் ஏற்படுகின்றார்கள். சிறுவர் சிலர் பலர் தம் தாய்தந்தையரின் இயற்கையிலிருந்தும் அவர்களுடைய பழக்க வழக்கங்களிலிருந்தும் நல்ல நடைகளையோ கெட்ட நடைகளையோ கற்றுக்கொள்கின்றனர். நல்லவைகளைக் கற்பதைவிடத் தீயவைகளைக் கற்பதிற் சிறியவர் முதற் பெரியவர் ஈறான எவர்க்குங் கருத்தும் முயற்சியும் எளிதிலே செல்லும். ஆகவே, பெற்றோரிலிருந்தும், பிற சேர்க்கையிலிருந்துந், தாம் முற்பிறவியிற் செய்த ஊழ்வினையிலிருந்துந் தீய நடைகளைப் பெற்றுத் தீயராய் ஒழுகுஞ் சிறுவர் சிறுமிகளுடன் தம் மக்கள் நெருங்கிய நேசமுடையராய் நடவாதபடி விழிப்பாயிருத்தல் தாய்தந்தையர்க்கு இன்றியமையாத கடமையாகும். தீய பிள்ளைகளுடன் சேர்ந்து எத்தனை நல்ல பிள்ளைகள் சிறு சுருட்டுப்பிடிக்கக் கற்றுக்கொள்கின்றார்கள்! எத்தனை பிள்ளைகள் வெற்றிலைபாக்குப் புகையிலை மெல்லக் கற்றுக்கொள்கின்றார்கள்! எத்தனை பிள்ளைகள் மூக்குத்தூள் முகரவும் அபின் தின்னவுங் கற்றுக்கொள்கின்றார்கள்! எத்தனை பிள்ளைகள் பொய் சொல்லவுஞ் சீட்டாடவுந் தெரிந்துகொள்கின்றார்கள்! எத்தனை பிள்ளைகள் திருடவுங் குத்துச்சண்டையிடவும் பிறரை மிக இழிந்த கொச்சைச்சொற்களால் திட்டவுஞ் செல்கின்றார்கள்! எத்தனை பிள்ளைகள் கைப்புணர்ச்சி எருவாய்ப்புணர்ச்சி சிறுமிப்புணர்ச்சி செய்து தம் முடம்பைப் பாழாக்கிக்கொள்கின்றார்கள்! இன்னும் இங்ஙனமே தீய சிறாருடன் சேர்ந்து நல்ல சிறாருந் தீயராகிச் செய்யும் அட்டூழியங்களையெல்லாம் எடுத்துச் சொல்லப் புகுந்தால் இவ்வேடு இடங்கொள்ளாது.

இவ்வாறு தீய பிள்ளைகளுடன் சேராமல், நல்ல பிள்ளைகளுடன் சேர்வதிலேயும் பல பொல்லாங்குகள் இருக்கின்றன. ஏனென்றால், எல்லாப் பிள்ளைகளுக்கும் பலவகையான விளையாட்டுகளை விளையாடுவதில் விருப்பம் அளவுபடாமலிருக்கின்றது; இது பிள்ளைகட்கு விலக்கமுடியாத ஓரியற்கையாகும். விளையாடுவதனாற் பிள்ளைகளின் உடம்பு மிகு முயற்சியுஞ் சுருசுருப்பும் உடையதாகி அழகிதாக வளர்வதோடு, அறிவையும் வலுவாக்கி விளங்கச்செய்யும். ஆகவே, பிள்ளைகளை விளையாடவொட்டாமல் தடைசெய்வதும் பெருந் தீங்கு பயப்பதாகும். ஆதலால், விளையாட விடுவதிலும் பிள்ளைகளின் உடம்புக்குப் பழுதுவாராமலும் உயிர்க்கு இறுதிவாராமலுந் தம்மாலான மட்டும் முயன்று பாதுகாக்க வேண்டுவது பெற்றோர்க்குப் பெருங் கடமையாகும். இவ்விவ்வாறு விளையாடினாற் கால் கை முறியும், உறுப்புகள் பழுதாய்ப்போகும், உயிர்போய்விடும்; ஆகையால் முரட்டுத்தனமான விளையாட்டுகளையொழித்து, மென்மையான விளையாட்டுகளையே விளையாடல் வேண்டும் என்று தாய்தந்தையர் தம் மக்களுக்கு அடிக்கடி உருக்கத்தோடு நல்லறிவு புகட்டி வரல்வேண்டும்.

எமது பிள்ளைமைப் பருவத்தில் யாம் முரட்டுத்தனமான விளையாட்டுக்கள் சிலவற்றை விளையாடி, அவற்றால் உடம்பு பழுதாகாமலும் உயிர்போகாமலுந் தப்பிப் பிழைத்தது தம்பிரான் அருளேயாகும். அவற்றுட் சிலவற்றை இங்கெடுத்துக் கூறுகின்றேம். யாம் ஏறக்குறைய ஆறாண்டுப் பிள்ளையாயிருந்தபோது, ஒரு திருவாசலில் ஒரு தமிழ் உவாத்தியாரால் நடத்தப்பட்ட தமிழ்ப் பள்ளிக்கூடத்தில் தமிழ் எழுத்துக்கள் கற்றுவந்தேம். அப்பள்ளிக்கூடத்திற்கு அருகாமையில் உயரமான ஒரு தேர்முட்டியிருந்தது. அஃதேறக்குறைய முக்கால் தென்னமர உயரம் இருக்கும். பள்ளிக்கூடத்தை விட்டு வெளியே போகும் நேரங்களில், என்னொடு தமிழ்கற்கும் பிள்ளைகளில் மனத்துணிவு மிக்க சிலர் படிவழியே அத் தேர்முட்டியின் மேலேறி அங்கிருந்து கீழே நிலத்திற் குதிப்பர். இதனைப் பலகாற் கண்ட யாமும் அவ்வாறு செய்ய ஆவல்கொண்டு, ஒருகால் துணிந்து அத் தேர்முட்டிமேல் ஏறிக் குதிப்பதற்காகக் கீழ்நோக்கினேம்; கீழே கிடுகிடு பாதாளமாயிருக்கக் கண்டு குதியாது அஞ்சிநின்றேம்; மற்றைப் பிள்ளைகள் எம்மை ஏளனஞ்செய்து தாம் குதித்து விளையாடுவாராயினர். அடுத்தநாள் யாம் அத் தேர்முட்டிக்குச் சென்று பிள்ளைகள் மேலிருந்து கீழே குதித்து விளையாடுதலைக் கண்டு மனத்துணிவுகொண்டு எப்படியோ மேலிருந்து கீழே குதித்துவிட்டேம்;

கீழே மணல் மிகுதியாய் இருந்தமையால் அச்சமும் உடம்பு அதிர்ச்சியுந் தவிர வேறேதுந் துன்பம் உண்டாகவில்லை. அதனால், மேன்மேல் மனத்துணிவுங் கிளர்ச்சியுங் கொண்டு விரைவில் தேர்முட்டிமேல் ஏறுவதுங் கீழேகுதிப்பதுமாகிய விளையாட்டிலே சிலநாட்கள் மிகவுஞ் சுருசுருப்பாக ஈடுபட்டு நின்றோம். ஒருகால் மேலிருந்து குதித்ததில் எமது ஒருகால் சிறிது மடங்கியது, மறுநாள் அம்மடக்குத் தீர்ந்துவிட்டமையால் மறுபடியும் அவ் விளையாட்டை யாம் விடவில்லை. இவ்வாறு சிலநாட்செல்ல, ஒருநாள் யாம் மேலிருந்து குதிக்கையில், மணலிற் புதைந்திருந்த ஒரு கூர்ங்கல் எமது உள்ளங்காலிற் குத்திவிட. அதனால் யாம் சிலநாள் வரையிற் பெருந் துன்பப்பட்டுப், பின்னர் அவ் விளையாட்டை அறவே விடுத்தேம். எம்மோடு அவ் விளையாட்டை விளையாடி வந்த மற்றப் பிள்ளைகளில் ஒருவனுக்குக் குதித்ததிற் கால்மடங்கிப் பழுதாய்ப் போனதிலிருந்து, அவ்வப்பிள்ளைகளின் பெற்றோர்கள் அப் பள்ளிக்கூட உவாத்தியாரைச் சினந்து, அவரால் அவ்விளையாட்டு நடவாமற் நிறுத்தினர்.

இன்னும், நாகையில் எமதில்லத்தின் பின்புறத்தே தோட்டத்திலிருந்த ஓர் உயரமான தென்னமரத்தின் மேலேறி அதன் உச்சியிலிருந்தபடியே கீழுள்ள நிலக்காட்சிகளைக்கண்டு மகிழ்ந்து வந்தேம். ஏறுங்காலும் இறங்குங்காலும் எமதுமார்பு அம்மரத்தில் உரைசிக் காயப்படுவ துண்டு. என்றாலும், அஞ்ஞான்றிருந்த மனத்துணிவினால், அதன்மேலேறி மகிழ்வதை விடவில்லை. பின்னர் ஒருகால் எம் நண்பர் ஒருவரோடு அவரது இல்லத்திற்குப் போனபோது, அவரது வீட்டுக்கொல்லையிலிருந்த ஓர் உயர்ந்த தென்ன மரத்தின்மேல் எவனையேனும் ஏற்றி ஒரு தேங்காய் பறிக்க விரும்பினர். உடனே யாமே ஏறிப் பறிக்க முயன்றது கண்டு, அவர் எம்மைத்தடுத்தும், அவரது சொல்லைக்கேளாமலே மேலேறிவிட்டேம். தேங்காயைப் பறித்துக் கீழே யெறிந்தபின், யாம் கீழ் இறங்குகையில் அம்மரத்தின் மேற்புறம் வழுவழுப்பாயிருந்தமையால், எம்முடைய கைகால்கள் நழுவத்துவங்கி யாம் கீழே விழுந்தறுவாயிலிருந்தேம். அப்போது யாம் அடைந்த திகிலும் நடுக்கமும் எடுத்துச் சொல்லல் இயலாது. சில நொடிப் பொழு[illegible]யும் நிலையிலிருந்ததைக், கீழிருந்